Registered as a NewsPaper

விலை ரூபா 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி-01 | 17-08-2005 | புதன் கிழமை | ஓசை-181



கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி.
வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-12425)

# சீர்செய்ய முடியாத நிலை நோக்கி யுத்த நிறுத்தம் செல்கின்றதா?

## சிந்திக்க வைக்கும் சம்பவங்கள் நிகழ்கின்றன என தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(லண்டன்)

**சிறிலங்கா அரசுடனான யுத்த நிறுத்த சூழல் எம்மைப் பொறுத்தவரையில் மிக மோசமான நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. சீர்செய்ய முடியாத அளவிற்குச் செல்கின்றதோ என்கின்ற அளவிற்குச் சிந்திக்க வைக்கின்ற சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

பி.பி.சியின் தமிழோசைக்கு நேற்று வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அந்தச் செவ்வியின் போது மேலும் கூறுகையில்; யுத்த நிறுத்த உடன்படிக்கையிலேயே கொண்டுவரப்பட்ட விடயங்கள் - சரத்துக்கள் உடன்பட்ட விடயங்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மீட்பு நிதிக்கடன் 12,700 பேருக்கு மீளளிக்க ஏற்பாடு

தமிழீழ மீட்பு நிதிக்கடன் இவ்வாண்டு பன்னிரண்டாயிரத்து எழுநூறு பேருக்கு மீளளிப்புச் செய்யப்படவுள்ளது. குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து இருநூறு பேருக்கும் மூப்பின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பதினோராயிரத்து ஐந்நூறு பேருக்கும் மொத்தமாக பன்னிரண்டாயிரத்து எழுநூறு பேருக்கு தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்புச் செய்யப்படவுள்ளது எனத் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதிப்பொறுப்பாளர் யோ. தமிழ்க்குமரன் தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்டோரின், பெயர்ப்பட்டியலும் மீளளிப்பு தொடர்பான நடைமுறைகளும் நாளை முதல் வெளியாகும்.

## அவசரகால நிலையை நீடிக்க கட்சித் தலைவர்களுடன் ஆராய்வு

### சனாதிபதி அவசர நடவடிக்கை

அவசரகால நிலையை மேலும் ஒரு மாதம் நீடிப்பது தொடர்பில் கட்சித்தலைவர்களின் கூட்டத்தை இன்று கூட்டி ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாளை பாராளுமன்றத்தை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவரசமாகக் கூட்டி இது குறித்து அறிவிக்கவுள்ளபோதும் பாராளுமன்றத்தில் அவசர காலச்சட்டத்தை நிறைவேற்ற முடியுமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஏனெனில் அவசர காலச்சட்டம் சனாதிபதித்தேர்தல் பிரச்சாரங்களைப் பாதிக்கலாம் என்கின்ற நிலையில் அதற்கு ஏனைய கட்சிகள் ஆதரவு வழங்குமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.எனவே கட்சித்தலைவர்கள் கூட்டத்தை இன்று கூட்டி அதில் எடுக்கப்படும் முடிவுக்கு அமைய அவசரகாலச்சட்ட நீடிப்புக் குறித்து நடவடிக்கை எடுக்கும் நிலையே காணப்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (32)

## அரசியல்துறைப் பொறுப்பாளருடன் ஹொக்லண்ட் நாளை சந்திப்பு

(கொழும்பு)

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் இவ்வாரம் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

மேஜர் ஜெனரல் ஹக்ரப் ஹொக்லண்ட் நாளை வியாழக்கிழமை சு.ப. தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் சந்திக்கவுள்ளதாக கண்காணிப்புக் குழுவின் பதில் பேச்சாளர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலைக்குப் பின்னர் எழுந்துள்ள சூழ்நிலை பற்றி இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படுமென அவர் தெரிவித்தார். போர்நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் அமைச்சர் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்தக்கூடிய அதிகாரம் தமக்கு இல்லையெனப்போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமர் கொலை சமாதான முயற்சிகளில் மேலும் தேக்க நிலையை உருவாக்கும்

### – நோர்வேயிடம் சனாதிபதி அபிப்பிராயம்

(கொழும்பு)

தடங்கலுக்குள்ளாகியுள்ள சமாதான முயற்சிகள் அமைச்சர் கதிர்காமரின் மரணத்தையடுத்து மேலும் தேக்கநிலை அடையுமென சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வேயிடம் சுட்டிக்காட்டியிருப்பதாக அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

இந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதில் இருதரப்பிலும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் முயற்சியில் தாம் ஈடுபடப்போவதாக நோர்வே தரப்பு தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் பிரதியமைச்சர் விதார் ஹெல்கேசனுடனான சந்திப்புக்குறித்தே இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (32)

## மகிந்த, ரணிலுடன் அரசியல் நிலவரம் குறித்து நோர்வே வெளியுறவு அமைச்சர் ஆராய்வு

(கொழும்பு)

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் தலைமையிலான குழுவினர் சிறிலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்ஷவையும், எதிர்க கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்து தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

நேற்றுப் பிரதமருடனான சந்திப்பு அலரிமாளிகையில் நடைபெற்றது.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவருடனான சந்திப்பு கொழும்பு கேம்பிரிஜ் பிளேசிலுள்ள எதிர்க் கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது சிறிலங்காவின் எதிர்கால சமாதானச் செயற்பாடுகள் தொடர்பாக உரையாடியுள்ளனர்.

அத்துடன் தற்போதைய அரசியல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பகுதிக்குள் பிரவேசிக்க கட்டைபறிச்சானில் நேற்றும் தடை!

கட்டைப்பறிச்சான் சோதனைச்சாவடியினூடாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்வதற்கான தடை நேற்றும் சிறிலங்காப் படையினரால் அமுல் செய்யப்பட்டிருந்தது.

குறிப்பாக வெளியார் செல்வதற்கு தடை அமுல்செய்யப்பட்டிருந்தது. இருந்தாலும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியினுள் உள்ளவர்கள் பயணம் செய்வதற்கு ஓரளவு தடைதவிர்க்கப்பட்டிருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (32)

## மன்னார் நகரில் வீடு வீடாக சிறிலங்காப் படையினர் சோதனை

### பொதுமக்கள் பெரும் விசனம்

(மன்னார்)

மன்னார் நகரப் பகுதியில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினரும், பொலிசாரும் வீடுவீடாக சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். வழமைக்கு மாறான இந்த நடவடிக் கையில் மக்கள் பெரும் விசனமடைந்துள்ளனர்.

மன்னார் அரசினர் வைத்திய சாலைப்பகுதி மற்றும் எமில்நகர், பனங்கட்டுக்கொட்டு ஆகிய இடங்களிலேயே இந்த திடீர் சோதனை நடவடிக்கையை படையினர் மேற்கொண்டனர். காலை முதல் இந்த நடவடிக்கை சில மணித்தியாலங்களுக்கு இடம்பெற்றது.

போர் நிறுத்த உடன்பாட்டிற்கு முற்றிலும் எதிரானஇந்த நடவடிக்கை படையினரால் எதற்காக இடம்பெற்றது என்பது குறித்து தெரிவிக்கப்படவில்லை.

(18)

# வரிவிளம்பரம்


**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

MS office, Desktop Publishing (D.T.P), Hardware 20.08.2005 சனிக்கிழமை K.S.K கணினி நிலையம் புதுக்குடியிருப்பில் ஆரம்பம் பிரிவு I மாலை 2.00 மணிக்கு, பிரிவு II இரவு 7.00 மணிக்கு அனுமதிக்கட்டணங்கள் இலவசம். பயிற்சி முடிவில் அரச,சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். நிர்வாகம். (6602)

**கணனிச்சேவை**

கணனி தட்டச்சு, ரென்சில் கட்டிங், றோனியோ, cd ரைற்றிங், போட்டோ கிரபிக்ஸ், டிஜிற்றல் அழைப்பிதழ்கள், வாழ்த்துக்கள், பதிப்பக வேலைகள், டிஜிற்றல் இயந்திரம் மூலம் போட்டோ கொப்பி போன்ற வேலைகளை ஒரே இடத்தில் விரைவாக செய்து பெற்றுக் கொள்ள நாடுங்கள். பொய்கை, டிப்போ றோட், கிளிநொச்சி. (6541)


## ஆசிரிய ஆலோசகர் ஆட்சேர்ப்பு பரீட்சை முடிவுகள் அனுப்பிவைப்பு

(வலிமேற்கு)

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் வலயக் கல்வி ரீதியாக ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு ஆட்களைத் தெரிவுசெய்வதற்காக நடாத்திய போட்டிப் பரீட்சையின் முடிவுகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

வட-கிழக்கில் இருக்கும் 24 வலயக்கல்வி அலுவலகங்களிலும் வெற்றிடமாகவுள்ள ஆசிரிய ஆலோசகர்களைத் தெரிவு செய்வதற்காக கடந்த யூன் மாதம் நடாத்தப்பட்ட பரீட்சை முடிவுகளே இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

12 பாடங்களுக்கு ஆசிரிய ஆலோசகர்களைத் தெரிவு செய்வதற்காக மூன்று பாடப்பரப்பில் இந்தப் பரீட்சை நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (37)

## கால்நடை வளர்ப்போர்சங்கம் உடையார்கட்டில் தெரிவு

(உடையார்கட்டு)

உடையார்கட்டு பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தெரிவிற்கான ஒன்று கூடல் நேற்று முன்தினம் 10.00 மணிக்கு உடையார்கட்டு கமநல சேவை நிலையத்தில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தை சேர்ந்த கார்த்திக் தலைமையில் இடம் பெற்றது.

இங்கு கருத்துரையை கால் நடைவைத்தியர் கஜறஞ்சன், விசுவமடுப் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் றொபேட் ஆகியோர், கால்நடை வளர்ப்போர் சங்க செயற்பாடு பற்றியும், கால்நடைவளர்ப்பு அபிவிருத்தி பற்றி கருத்து வழங்கியதையடுத்து கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க தெரிவு இடம்பெற்றது.

நிர்வாகத்தெரிவில் க.சதாசிவம் தலைவராகவும், செயலாளராக க.இளங்கோவும், பொருளாளராக ந.சண்முகரத்தினமும் அடங்கலாக பதினொருவர் இடம் பெற்றனர். (19)


**1 ஆவது பிறந்தநாள் அழைப்பிதழ்**




*அன்புடையீர்*

*சசிக்குமார் விஜயலக்சுமி தம்பதிகளின் செல்வக் குழந்தை ச.மயூரன் தனது முதலாவது பிறந்த தினத்தை 17.08.2005 புதன்கிழமை இன்று தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாட இருப்பதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து குழந்தையை ஆசிர்வதித்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

தங்கள் நல்வரவை நாடும்
திரு.திருமதி சசிக்குமார் விஜயலக்சுமி
செந்தில்நகர், பளை.

(6651)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு விபரம்

*13.08.2005 அன்று (சனிக்கிழமை) நடைபெற்ற குமுழமுனை மகா வித்தியாலய பவளவிழா நிதிக்கான அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றோர் விபரம்*

1. முதலாம் பரிசுக்குரிய இலக்கம் – 1877
2. இரண்டாம் பரிசுக்குரிய இலக்கம் – 1217
3. மூன்றாம் பரிசுக்குரிய இலக்கம் – 4209

ஆறுதல் பரிசுக்குரியவர்கள் இலக்கங்கள்

1) 4853
2) 1436
3) 1135
4) 2701
5) 4868
6) 111
7) 1235
8) 905
9) 3414
10) 1696

**மேற்படி வெற்றிக்குரியவர்கள் குமுழமுனை மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்துடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்தி பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.**

**பழைய மாணவர் சங்கம்.**

(சி-12531)


# மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு
# வடக்கு–கிழக்கு மாகாணசபை

*வடக்கு–கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் II (நீகோட் II)*

*ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது*

*"ஆ.அ.வ" கடன் இல:2168–SRI (SF)*

**யாழ்.மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் இல: 01**

01. வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டத்தின் (NECORD II)ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளைத் தற்போது கோருகின்றார்.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலை பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | JF/NECORD-ll/HS/01 | ஊர்காவற்துறை மாவட்ட, வைத்தியசாலையில் மருத்துவமாது விடுதி அமைத்தல். | M7 | 21,000/= |
| 02 | JF/NECORD-ll/ED/01 | கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் 130'X25' அளவுடைய இரு மாடிக்கட்டடம் புனரமைத்தல். | M6 | 84,500/= |
| 03 | JF/NECORD-ll/ED/02 | கச்சாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் 110'X25' அளவுடைய இரு மாடிக் கட்டடம் புனரமைத்தல். | M6 | 70,500/= |
| 04 | JF/NECORD-ll/ED/03 | மிருசுவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் 110'X25' அளவுடைய இரு மாடிக் கட்டடம் புனரமைத்தல். | M6 | 71,000/= |
| 05 | JF/NECORD-ll/ED/04 | சென் ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையில் 70'X25' அளவுடைய மூன்று மாடி வகுப்பறைக் கட்டடம் புனரமைத்தல். | M6 | 64,000/= |
| 06 | JF/NECORD-ll/ED/05 | கோண்டாவில் இராமகிருஷ்ணமிசன் வித்தியாலயத்தில் 110'X25' அளவுடைய இரு மாடிக் கட்டடம் புனரமைத்தல். | M6 | 61,000/= |
| 07 | JF/NECORD-ll/ED/06 | சென் ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயத்தில் 110'X25' அளவுடைய மூன்று மாடி வகுப்பறைக் கட்டடம் பூரணப்படுத்தல். | M7 | 35,000/= |
| 08 | JF/NECORD-ll/ID/01 | பருத்தித்துறையில் வீதி அபிவிருத்தி திணைக்கள நிறைவேற்று எந்திரிகள் அலுவலக கட்டடம் புனரமைத்தல். | M7 | 41,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

i நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ii இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக ("இக்ராட்" டுடன் M7 இற்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) இருத்தல் வேண்டும்.

iii கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழுநிரலொன்று வழங்கப்படவேண்டும்.

iv "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

v மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதி அற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

vi ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகர்ரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

04. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்விகோர முடியும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலதிக விபரங்களை மாவட்ட பிரதித்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, கச்சேரி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி 021-2223625, தொலைநகல்-021-2225163, மின்னஞ்சல்:necordjf @sltnet.lk

06. ஒப்பந்த ஆவணங்கள் ஆவணி மாதம் 18 ஆம் திகதி முதல் புரட்டாதி மாதம் 2 ஆம் திகதி வரை முற்பகல் 9.30 மணியிலிருந்து பிற்பகல் 3.00மணி வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/- செலுத்திப்பெற்றுக்கொள்ளலாம்.

07. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும், கேள்வியிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

08. அந்தந்த வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள், "தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, NECORD, கச்சேரி, யாழ்ப்பாணம்" இற்கு புரட்டாதி மாதம் 9ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்பாகக் கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.


09. ஒப்பந்தகாரருக்குக் கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் புரட்டாதி மாதம் 7 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

*ஆ. சிவசுவாமி,*
*பதில் தலைவர், மாவட்டக் கேள்விச்சபை,*
*மேலதிக அரசாங்க அதிபர்,*
*யாழ்ப்பாண மாவட்டம்.*

(சி.12532)

# காஸாவில் இருந்து யூதர்கள் வெளியேற இஸ்ரேல் இறுதிச் சந்தர்ப்பம் வழங்கியது




(டெல்அவிவ்)

**காஸா பள்ளத்தாக்கில் வாழும் ஆயிரக்கணக்கான யூதர்கள் வெளியேற இஸ்ரேல் இறுதிச்சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளதாகவும், இவர்கள் தாமாகவே வெளியேறாவிட்டால் கட்டாயமாக வெளியேற்றப்படுவார்கள் என்று பிரதமர் ஏரியல் ஷரோனின் மேலதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.**

காஸாவிலிருந்து யூதக்குடியிருப்புக்களை அப்புறப்படுத்தும் திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமாகியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1967 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தில் இஸ்ரேலியப் படைகள் காஸா பள்ளத்தாக்கில் ஆக்கிரமித்து யூதர்களைக் குடியமர்த்தியிருந்தன. தற்போது அங்கு 8500 பேர் வசிக்கிறார்கள். அவர்களை முற்றாக அப்புறப்படுத்தி 14 இலட்சம் பலஸ்தீனர்கள் சுதந்திரமாக நடமாட வழிவகுப்பது தமது நோக்கம் என இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல்ஷரோன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குடியேற்றக்காரர்கள் காஸாவிலிருந்து கண்ணீர் மல்க வெளியேறி வருவது குறிப்பிடத்தக்கது.



காஸாப்பகுதியில் குடியேற்றக்காரருடன் உரையாடும் இஸ்ரேலியப் படை வீரர்.

## இருகுழுக்களுக்கிடையில் மோதல் குவாண்டமாலா சிறையில் 30 பேர் பலி

குவாண்டமாலா சிறைச்சாலையொன்றில் இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் முப்பது பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்கு கூரான ஆயுதங்கள், துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இந்தத் தாக்குதலின்போது 80 இற்கு மேற்பட்ட சிறைக் கைதிகள் காயமடைந்துள்ளனர்.

இந்தச்சம்பவத்தின் போது சிறைச்சாலை அதிகாரிகள் சிலரும் காயமடைந்தனர். நிலைமையைக் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவர நூற்றுக்கணக்கான பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பல மணி நேரம் போராடியுள்ளதுடன், கண்ணீர்ப்புகை பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், சிலரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு குழுக்களுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டு வந்த சமாதான நடவடிக்கைகள் நேற்று முன்தின மோதலால் முறிவடைந்தது என சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## ஈராக்கின் புதிய அரசியல் யாப்பை வரைய மேலும் காலஅவகாசம் வழங்கியது பாராளுமன்றம்

(பாக்தாத்)

ஈராக்கில் புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதற்கு மேலும் கால அவகாசம் வழங்க அந்நாட்டின் பாராளுமன்றம் இணக்கம் தெரிவித்துள்ளது.

ஈராக்கின் அரசியல் யாப்பை இயற்றும் குழுவில் அங்கம் வகித்தவர்களுக்கு மத்தியில் இணக்கப்பாடு காணப்படாததால் கால எல்லையை நீடிப்பதற்கு ஈராக் பாராளுமன்றம் முடிவு செய்துள்ளது.

எனினும் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பல விடயங்கள் தொடர்பாக இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதாக ஈராக் பாராளுமன்றத்தின் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சில விடயங்கள் தொடர்பாக இதுவரை இணக்கப்பாடு காணப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே குறிப்பிடப்பட்ட கால எல்லையின் படி புதிய அரசியல் யாப்பைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் நேற்று முன்தினத்துடன் பூர்த்தியடைய வேண்டும். எனினும் இந்த நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு மேலும் ஒருவார கால அவகாசத்தை வழங்க ஈராக் பாராளுமன்றம் முடிவு செய்துள்ளது.

அரசியல் யாப்பை வரையும் பணிகள் பூர்த்தியடைந்ததும் அதனை ஈராக் தேசிய சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய அரசியல்யாப்பு மீதான சர்வசன வாக்கெடுப்பை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடத்துவதற்கு ஈராக்அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதேவேளை ஈராக்கின் புதிய அரசியல் யாப்பை உருவாக்கும் நடவடிக்கை துரிதப்படுத்தப்பட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. அதற்குத்தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் வழங்க அமெரிக்கா தயாராக இருப்பதாக அந்நாட்டின் இராஜாங்க செயலாளர் கொண்டலீசா ரைஸ் தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் எதிர்காலம் அந்நாட்டின் புதிய அரசியல் அமைப்பிலேயே தங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## எகிப்து சுற்றுலா தலகுண்டுவெடிப்பு சந்தேகத்தில் மூவர் கைது

செங்கடல் ரிசார்ட்டில் குண்டு வெடித்தது தொடர்பாக மூன்று பேரை எகிப்து இராணுவத்தினர் கைது செய்தனர்.

கடந்த யூலையில் செங்கடல் பகுதியில் உள்ள ஷர்ம் யெல்ஷேக் என்ற சுற்றுலா தலத்தில் குண்டு வெடித்தது. இதில் 64 பேர் பலியாகினர். இந்தக் குண்டுவெடிப்பில் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் மூன்று பேரை எகிப்துப் படையினர் கைது செய்திருப்பதாக 'அல்அக்ரம்' பத்திரிகை தெரிவித்துள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

யூலை 23 ஆம் திகதி நடந்த குண்டு வெடிப்பில் இந்த மூன்று பேருக்கும் உதவியவர்கள் மற்றும் இந்தச் சதியின் பின்னணியில் இருக்கும் மற்றவர்களையும் படையினர் தொடர்ந்து தேடி வருகின்றனர். வடக்கு சினாய் பகுதியில் உள்ள ஒரு தோட்டத்தில் நிறைய வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பலஸ்தீனியர் ஒருவருக்குச் சொந்தமான தோட்டத்தில் மூன்று பேரும் கைது செய்யப்பட்டனர். இம் மூவரில் ஒருவர் காவலாளியாக வேலை பார்த்துக்கொண்டிருந்தார். அவரிடம் விசாரணை நடத்தியதில் மற்ற இருவர் பற்றி படையினருக்குத் தெரியவந்துள்ளது.

## இந்தோனேசிய வன்முறையை முடிவுக்குக்கொண்டு வர சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் கைச்சாத்து

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் ஆச்சே மாகாணத்தில் கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற வன்முறைக்கு முற்றுப்புள்ளிவைக்கும் விதத்தில் இந்தோனேசிய அரசாங்கப் பிரதிநிதிகளும் சுதந்திர ஆச்சே இயக்க கிளர்ச்சிவாதிகளும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சமாதான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டனர்.

பின்லாந்தில் நேற்று முன்தினம் கைச்சாத்திட்ட சமாதான ஒப்பந்தத்தின் அடிப்படையில் முப்பது வருடகாலமாக உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்ட ஆச்சே மாகாணத்தில் சமாதானம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இருதரப்பினரும் கருத்து வெளியிடுகையில்; இந்தோனேசிய இராணுவத்திற்கும் சுதந்திர ஆச்சே மாகாண கிளச்சியாளருக்கும் இடையில் முப்பது வருடகாலம் நீடித்த கெரில்லா யுத்தம் இந்த சமாதான ஒப்பந்த அடிப்படையில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

இந்த சமாதான உடன் படிக்கையில் ஆச்சே மாகாணத்துக்கு பெருமளவு சுயாட்சி அதிகாரம் வழங்கப்படும.

சுதந்திர ஆச்சே இயக்கம் கலைக்கப்பட வேண்டும் என்பதும் ஒரு நிபந்தனையாகும்.

இந்த சமாதான ஒப்பந்தம் ஏற்படுவதற்கு பின்லாந்து முன்னாள் சனாதிபதி முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## யப்பானில் நிலநடுக்கம் டோக்கியோவும் அதிர்ந்தது

(டோக்கியோ )

யப்பானின் வடக்குப்பகுதியில் நேற்றுக்காலை பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பூமியதிர்ச்சி ரிக்டர் அளவில் 6.8 புள்ளியாகப் பதிவானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலநடுக்கத்தின் காரணமாக சுமார் 300 கிலோமீற்றர் தெற்கேயுள்ள டோக்கியோ நகரத்தின் கட்டடங்களும் ஆட்டங்கண்டுள்ளது. ஒரு சிலர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

நிலநடுக்கம் தாக்கிய இடம் பாரியநகரங்களும் உயர்தொழிநுட்ப தொழிற்சாலைகளும் அடங்கிய பாரிய தொழில் பிரதேசமாகும். இங்கு சுமார் பத்து இலட்சம் பேர் வசிக்கிறார்கள் எனவும் ஆரம்பத்தில் 80 பேர் காயமடைந்துள்ளதாகக் கூறப்பட்டாலும் ஒருவர் படுகாயமடைந்து, 13 பேர் ஓரளவு காயமடைந்ததாக என். எச். கே.செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

## ரஷ்யாவில் பறவைக்காய்ச்சல் நோய் தடுக்க அரசு அதிரடி நடவடிக்கை

(மொஸ்கோ)

ரஷ்யாவில் பறவைக்காய்ச்சல் நோய் பரவுவதைத் தடுப்பதற்காக அந்நாட்டு அரசு கடும் முயற்சிகளை எடுத்து வருகின்றது.

உயிராபத்தை ஏற்படுத்தும் பறவைக்காய்ச்சல் நோய் ரஷ்யாவின் பல பகுதிகளிலும் பரவியதை அடுத்து இந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பறவைக்காய்ச்சலைத் தடுக்கும் ஜி-5, எச்-1 வைரஸ் யூறல் மலைத்தொடர் ஊடாக பரவிவருவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் இந்த வைரஸ் தாக்கத்தினால் குறைந்த பட்சம் 500 கோழிகள் உயிரிழந்திருப்பதாக அந்நாட்டு அவசர கால அமைச்சு தெரிவித்துள்ளது. ஆசிய நாடுகளில் பரவிவரும் இந்தப் பறவைக் காய்ச்சல் நோய் காரணமாக மில்லியன் கணக்கான பண்ணை வளர்ப்பு பறவைகள் அழித்தொழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆளில்லா விண்வெளி ஓடம் சந்திரனுக்கு அனுப்ப சீனா திட்டம்

சீனா ஆளில்லா விண்வெளி ஓடத்தை சந்திரனுக்கு அனுப்பும் மூன்று சட்டதிட்டம் பற்றி அறிவித்துள்ளது.அங்கிருந்து கல் மாதிரிகளைக் கொண்டு வருவது இந்த திட்டத்தின் நோக்கமாகும். முதலாவது விண்வெளி ஓடம் 2007 ஆம் ஆண்டு விண்வெளிக்கு அனுப்பப்படும் என சீனாவின் சந்திர மண்டல ஆராய்ச்சித்திட்டத்தின் பொறுப்பதிகாரி கூறியுள்ளார்.சீனா 1970 ஆம் ஆண்டிலிருந்து பல இலட்சியங்களைக்கொண்டு விண்வெளி ஆராய்ச்சித்திட்டத்தை அமுல் செய்து வருகின்றது.

அந்நாடு 2003 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தமது விஞ்ஞானி ஒருவரை விண்வெளிக்கு அனுப்பியிருந்தது. அடிக்கடி ஆய்வு நோக்கின் வான் செய்மதிகளையும் விண்வெளிக்கு அனுப்பி ஆராய்ச்சி செய்து வருகின்றது.

## அமெரிக்கா, இங்கிலாந்து மீது மீண்டும் தாக்குதல் நடத்துவோம்

(லண்டன்)

அமெரிக்கா, இங்கிலாந்து மீது மீண்டும் தாக்குதல் நடத்த அல் ஹைறதா அமைப்பு திட்டம் தீட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவின் 110 மாடி உலக வர்த்தக மையத்தை அல்ஹைறதா தீவிரவாதிகள் விமானத்தை மோதித்தகர்த்தனர். இதன் நான்காவது ஆண்டு தினத்தை முன்னிட்டு அமெரிக்கா,இங்கிலாந்து மீது மீண்டும் தாக்குதல் நடத்த அல் ஹைறதா தீவிரவாதிகள் திட்டம் தீட்டியுள்ளனர்.

இந்த முறை எரிபொருள் நிரப்பி பாரவூர்திகளை பெற்றோல் நிலையங்கள் மீது மோதி மிகப்பெரிய அழிவை ஏற்படுத்த தீவிரவாதிகள் திட்டம் தீட்டியிருப்பதாக அமெரிக்க உளவுத் துறையினர் எச்சரித்துள்ளனர்.

குறிப்பாக அமெரிக்காவின் நியூ யோர்க், சிக்காகோ லொஸ்ஏஞ்செல்ஸ் மற்றும் இங்கிலாந்து தலைநகர் லண்டன் மீதும் தாக்குதல் நடத்த் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

சமீபத்தில் லண்டன் சுரங்க ரயில் நிலையத்தில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி 52இற்கும் மேற்பட்டோர் பலியாயினர். இந்நிலையில் மீண்டும் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த திட்டம் தீட்டியிருப்பதால் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. தி சண்டே டைம்ஸ் பத்திரிகை இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளது.

## பெரும்பாலான முதியவர்களுக்கு தேவையான மருத்துவ வசதி கிடைப்பதில்லை -ஆய்வறிக்கையில் தெரிவிப்பு


(நியூயோர்க்)

பெரும்பாலான முதியவர்களுக்குத் தேவையான மருத்துவபராமரிப்பு கிடைப்பதில்லையென நியூயோர்க்கில் வெளியான ஆய்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அனேகமான முதியவர்கள் தமக்கென சிபார்சு செய்யப்பட்ட மருத்துவ பராமரிப்பு வசதிகளில் ஒரு பகுதியை மாத்திரமே பெறுகிறார்கள் என யப்பானின் கியோட்டோ பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வயது முதிர்ந்த காலத்தில் கூடுதலான மருத்துவ பராமரிப்பை பெறும் பிரஜைகள் அதிக காலம் தேகாரோக்கியத்துடன் வாழக்கூடிய வாய்ப்பு இருப்பதாக பேராசிரியர் தகஹீரோஹெக்காசி தெரிவித்துள்ளார்.

## வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கி கௌரவிப்பு



வடக்கு கிழக்கு மாகாண மட்டத்திலான தமிழ் மொழி கலைத்திறன் போட்டியில் திறந்த பிரிவில் நாடகப்போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்று தேசிய ரீதியிலான போட்டிக்குத் தெரிவாகிய கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவ, மாணவிகள் அரசாங்க அதிபர் இராசநாயகம், தமிழீழ கல்விக்கழக பொறுப்பாளர் வெ.இளங்குமரன, பிரதிக் கல்விப்பணிப்பாளர் பத்மநாதன ஆகியோரால் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். (படங்கள் :-குகன், பிரதீபன்)

## மன்னார் மாவட்டத்தில் நடைபெற்ற சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு நிகழ்வு

மன்னார் மாவட்டத்தில் சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு விழாவும், மறுவயல் பயிர்கள், வயல்விழாவும் கடந்த எட்டாம் திகதி பாலையடி புதுக் குளம் பகுதி பாடசாலையில் விவசாயத் திணைக்கள மன்னார் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் ஜனாப் எஸ்.எம்.ஹுசைன் தலைமையில் காலை 10.30 மணிக்கு ஆரம்பமானது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் சிறப்புரை வழங்கும்போது குறிப்பிடுகையில்; இன்று நடைபெற்ற இந்த வயல் விழாவானது ஓர் நிகழ்வாக இல்லாது மன்னார் மாவட்டத்தில் உற்பத்தியில் ஒரு பெரும் மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

நாம் நெற் செய்கையிலே பழக்கப் பட்டு வந்துள்ளோம். இன்று நடைபெற்ற இந்த வயல்விழா மூலம் மாற்றுப் பயிர்ச்செய்கையின் மூலம் ; பெருமளவு இலாபம் பெறலாம் என்பதனைத் தெரியப்படுத்தியுள்ளார்கள். அத்தோடு குறைந்தஏக்கரில், குறைந்த செலவில் கூடிய பலனைப்பெறுவதற்கான ஒரு வாய்ப்பினையும் ஏற்படுத்தித் தந்துள்ளார்கள். இப்படிப்பட்ட பயிர்ச்செய்கை முறையை ஓரிரு விவசாயிகள் மேற்கொள்ள முடியாது. இதற்கு ஒரு அமைப்பு ரீதியாக ஒன்றுபட்ட அமைப்புக்கள் மூலம் உற்பத்திகளை மேற்கொள்ள முடியும். இதன் மூலம் தான் இதற்கான சந்தை வாய்ப்பையும் ஏற்படுத்த முடியும் என்றார்.

இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட விதை நெல் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் விவசாய அமைப்புக்கள், மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் பெருந்தொகையான விவசாயிகள், அரசதிணைக்கள உத்தியோகத்தர்கள் எனப்பலர் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (46)

## குரவயல் கிராமத்தில் 39 பயனாளிகளுக்கு தொழில் ஊக்குவிப்புக் கடனாக ரூபா ஐந்து இலட்சம்

(முள்ளியவளை)

**நிகொட் திட்ட நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் சமூக அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் முல்லைத்தீவு மாவட்டத் திற்குட்பட்ட குரவயல்கிராமத்தில் 39 பயனாளிகளுக்கு தொழில் ஊக்குவிப்புக் கடனாக ஐந்துஇலட்சம்ரூபா வழங்கப் பட்டுள்ளது.**

இந் நிகழ்வானது கடந்த 12 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு குரவயல் பொதுமண்டபத்தில் குரவயல் கிராமத் தலைவர் இராசேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வின் முன்னதாக பொதுச் சுடரினை முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆலோசகர் சி.பாலசுப்பிரமணியம் ஏற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியினை உடையார்கட்டு பிரதேச மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் அகநிலா ஏற்றி வைத்ததையடுத்து அகவணக்கம் இடம்பெற்றது மண்டப நிகழ்வில் மங்கல விளக்கினை விசுவமடு சமூக பொருளாதார அபி விருத்தி வங்கி முகாமையாளர் மதன்ராஜ் ஏற்றி வைத்தார்.அதனையடுத்து தலைமையுரை இடம்பெற்று கருத்துரையினை தமிழர்புனர்வாழ்வுக் கழக முல்லை மாவட்ட ஆலோசகர் பாலசுப்பிரமணியம், தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட் திட்ட முல்லை மாவட்ட இணைப் பாளர் பரமநாதன் நிகொட் பயிற்சித் திட்ட இணைப்பாளர் சுதர்சன் நிகொட திட்ட பூவரசங்குளம் கிராம இணைப் பாளர் மோகன், சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி முகாமையாளர், குரவயல் தமிழ் வித்தியாலய அதிபர் மேகநாதன் ஆகியோர் நிகழ்த்தினர். இதனையடுத்து வழங்கப்படும் கடனுதவியின் முக்கியத்துவம் பயன்படுத்தல் அதனூடாக எவ்வாறு வருமான அதிகரிப்பை ஏற்படுத்த முடியும் இதனூடாக பயனாளி எவ்வாறான முன்னேற்ற மாற்றத்தை அடையலாம், இக் கடனுதவிகள் ஊடாக சமூகத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார அதிகரிப்பு மாற்றங்கள் உள்ளடங்கலுடன் சிறப்பு கருத்துரையினை தமிழர் புனர்வாழ்வுக்கழக முல்லை மாவட்டப் பணிப்பாளர் எம். ஆர் மூர்த்தி நிகழ்த்தினார். இதில் விவசாயக் கடனாக 11 பயனாளிகளுக்கும் கால் நடை வளர்ப்புக்காக 11 பயனாளிகளுக்கும் சிறு வியாபாரத் திற்காக 10 பயனாளிகளுக்கும் மேட்டு நிலப் பயிர்ச் செய் கைக்காக ஏழு பயனாளிகளுக்குமாக மொத்தம் 39 பயனாளிகளுக்கு ஐந்து இலட்சம் ரூபா கடனுதவி வழங்கப் பட்டுள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட்திட்ட முல்லை மாவட்ட சமூக வலுவூட்டாளர் திருமதி ர.சத்தியதீபா தெரிவித்துள்ளார். (ஆ)

## தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறை

(முள்ளியவளை)

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிகொட் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட நிகொட் திட்டக் கிராமங்களில் அவ்வப் பகுதி சமூக வலுவூட்டாளர்களின் ஒழுங்கு படுத்தலில் தலைமைத்துவப் பயிற்சி பட்டறைகள் இடம்பெற்று வருகின்றன.

மேற்படி பயிற்சிப் பட்டறையில் குரவயல் கிராமத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிகொட் திட்ட முல்லை மாவட்ட சமூக வலுவூட்டாளர்.சத்தியதீபாவும், செம்மலை கிழக்கு கிராமங்களில் முல்லை மாவட்ட நிகொட் திட்ட இணைப்பாளர் பரமானந்தம் முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆலோசகர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் கருத்துரை வழங்கி வருகின்றனர். மேற்படி பட்டறையில் பொது அமைப்புச் சார்ந்தவர்கள் பொது மக்கள் எனப் பெருமளவானோர் கலந்து வருகின்றனர். (ஆ)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட சிலாவத்தை கிராமத்தில் பெண்களுக்கான பன்ன வேலைப் பயிற்சி

சுனாமியால் பாதிக்கப்பட்ட சிலாவத்தை கிராமத்தில் பெண்களுக்கு தொழில்துறையினை ஆரம்பிக்கும் நோக்குடன் 'வேள்ட்விசன் நிறுவனத்தின் நிதியுதவியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் பனை அபிவிருத்தி சபையினரால் பன்ன வேலைப் பயிற்சி ஆரம்பமானது.

முல்லை மாவட்ட பனை அபிவிருத்தி சபை இணைப்பாளர் தர்மகுலசிங்கம் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை மாவட்ட இணைப்பாளர் தயா, 'வேள்ட்விசன்' நிறுவனத் திட்ட இணைப்பாளர் ஐங்கரன் ஆகியோர் ஏற்றினார்கள். தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன திட்டமிடல் செயலாளர் அமிர்தலிங்கம் ஏற்றினார்.

கருத்துரைகளை பனை அபிவிருத்தி சபை போதனாசிரியர் சிநாகம்மா, முல்லை மாவட்ட த.பொ.மே நிறுவன இணைப்பாளர் தயா, 'வேள்ட் விசன்' நிறுவனத் திட்ட இணைப்பாளர் ஐங்கரன் த.பொ.மே நிறுவனத் திட்டமிடல் செயலாளர் அமிர்தலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

ஆறு மாத காலம் நடைபெறும் இப்பயிற்சி வகுப்பில் 25 பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர். முதற்கட்டமாக நடைபெறும் இந்தப் பயிற்சியின் பயிற்சியாளர்களுக்கும், ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படவுள்ளது. (20)

## கற்றல் உபகரணம் வழங்கல்

(முல்லை மாவட்டப் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தால் 'பிற்' நிறுவனத்தின் அனுசரணையுடன் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. மன்னாகண்டல் கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட வசந்தபுர கிராம மாணவர்கள் 84 பேருக்கும், பி.ப 3.00 மணியளவில் முள்ளியவளை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட முள்ளியவளை கிழக்கு கிராம மாணவர்கள் 90 பேருக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## கற்சிலைமடுவில் பொது நோக்கு மண்டபம் திறந்து வைப்பு

(ஒட்டுசுட்டான்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடனும் நிகொட் திட்ட நிறுவன ஆதரவுடனும் முத்துஐயன் கட்டு கூட்டுறவு சங்கத்தால் கற்சிலைமடுவில் பொது நோக்கு மண்டபம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 13 ஆம் திகதி கற்சிலைமடு பண்டார வன்னியன் நினைவு கூரும் நினைவுக் கல்லுக்கு அருகாமையில் காலை 11.00 மணியளவில் முல்லை மாவட்ட ஊடக பேச்சாளர் சி.வேதவனம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பொதுச் சுடரினை முல்லை மாவட்ட உதவி அரச (அதிபர்,)(தலைமைப்பீடம) செல்வி ஆரணி ஏற்ற தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றினார் பெயர்ப் பலகையினை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக செயலர் செல்வி சுபாசினி கந்தையா திரை நீக்கம் செய்து வைக்க, மண்டபத்தினை வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினா ச.கனகரத்தினம் நாடாவை வெட்டி திறந்து வைத்தார். நூலக அறையினை வடக்கு கிழக்கு மாகாண நிகொட் பிரதிநிதி அருணோதயம் நாடாவை வெட்டித் திறந்து வைக்க விளையாட்டு அறையினை நிகொட் திட்ட பிரதி நிதி அருணோதயம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

கருத்துரைகளை கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் நா.வன்னியசிங்கம், சமாதான நீதவான் வை.சிவஞானலிங்கம், கிராம அலுவலர் மு.சிவனேசன் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தில்லையம்பலம், கச்சேரி உதவி அரசஅதிபர் ஆரணி, பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், உதவி அரச அதிபர் சுபாசினி கந்தையா, முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆகியோர் வழங்கினர். (05)

## வவுனியாவில் வீடு தீப்பற்றியது ஐந்து இலட்ச ரூபா சேதம்

வவுனியா உக்கிலாங்குளம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வீடு ஒன்று தீப்பற்றி எரிந்ததில் அவ்வீட்டில் இருந்த சுமார் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகின. இவ்வீட்டிற்கு அருகிலுள்ள காணியைத் துப்புரவு செய்யும் நோக்கோடு அக்காணி உரிமையாளர் நெருப்பு வைத்தபோது அதிலிருந்து வந்ததீப்பொறி ஒன்று அருகில் கிடுகினால் வேயப்பட்டிருந்த கல்வீட்டின் மேல்பட்டதில் இவ்வீடு தீக்கிரையானது. இதேவேளை அருகில் இருந்த மரவேலைத் தளத்திலும் நெருப்புப் பிடித்த போதிலும் பாரிய சேதம் ஏற்படவில்லை. இவ்வேளை இவ்வீட்டு உரிமையாளர் வெளியில் சென்றிருந்ததாகவும், அயலவர்கள் எவரும் வீட்டில் இருக்கவில்லை எனவும் தெரிவித்தனர். நெருப்பு வைக்கப்பட்ட காணியைச் சுற்றி கிடுகினால் வேயப்பட்ட வீடுகள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும் மாதாந்த வீரமுரசு நிகழ்வும்

மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும் மாதாந்த வீரமுரசு நிகழ்வும் கற்சிலைமடுவில் நடைபெற்றுள்ளது. கடந்த 13 ஆம் திகதி மாலை 8.00 மணியளவில் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் நா. வன்னியசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் சுடரினை அண்ணாவியார் மு.இளையகுட்டி ஏற்றியதைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்களும், உறவினர்களும், மாவீரர்களுக்கான ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலையினை அணிவித்தனர். தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கப்பட்டதுடன் இரவு கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. இதில் கருத்துரைகளை ஊடகப் பேச்சாளர் சி.வேதவனம், முல்லைமாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆகியோர் வழங்கினர். (05)

## 'சுனாமியின் பின் மீண்டெழுவோம்' போட்டி நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டப் பெறுபேறு

மத்திய கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட 'சுனாமியின் பின் மீண்டெழு வோம்' என்ற தலைப்பில் நடைபெற்ற இசை நடன, நாடகப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் தெரிவாகி வடக்கு கிழக்கு மாகாண மட்டத்தில் நடை பெற்றபோட்டியில்கிளி.மாவட்டப்பாடசாலைகள் பெற்றுக் கொண்ட இடங்கள் பின் வருமாறு; கனிஷ்டபிரிவு நாடகம், முதலாமிடம்:- கிளி/ பிரமந்தனாறு ம.வி. சிரேஷ்ட பிரிவு நாடகம், இரண்டாமிடம்:- கிளி/ உருத்திரபுரம் ம.வி. ஆரம்பப் பிரிவு இசை, இரண்டாமிடம்:- கிளி. சாந்தபுரம் அத.கபாடசாலை. இடை நிலைப்பிரிவு இசை முன்றாமிடம், கிளி. உருத்திரபுரம் ம.வி. இதில் முதலாமிடம் பெற்ற நிகழ்வு தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாதரவத்தைக்கு மின்சாரமில்லை மக்கள் விசனம் தெரிவிப்பு


(யாழ்ப்பாணம்)

வாதரவத்தை கிராம மக்கள் நீண்டகாலமாக மின்சார வசதி இன்றி பெரும் அவலநிலைக் குள்ளாகியிருப்பதாக கிராம வாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வாதரவத்தை என்ற கிராமத்திற்கு இதுவரை காலமும் மின்சாரம் வழங்கப்படவில்லை. மின்சாரம் வழங்குவதற்கான எந்த ஒரு முயற்சியையும் எவரும் மேற் கொள்ளவும் இல்லை.இந்தக் கிராமத்திற்கு மின்சார வசதி இல்லா மையால் மாணவர்களது கல்வி செயற்பாடுகள் பாதிக்கப்படு கின்றது.

இந்தக் கிராமத்தில் குடிநீர் வசதி இல்லாமையும் பெரும் பிரச்சினையாகவே இருந்து வரு கின்றது. இந்த வருடத்திற்குள் இந்தக் கிராமதிற்கு மின்சாரவசதி யைப் பெற்றுத்தருவதாக பாராளு மன்ற உறுப்பினர்களும், சில அரச நிறுவனங்களும் உறுதிமொழி கூறி யிருப்பதாக கிராமவாசிகள் தெரி விக்கின்றனர்.

# இழுத்தடிக்கப்பட்டுவரும் பி.செ.கட்டட வேலைகள்



கடந்த ஒருவருடத்திற்கு மேலாக கட்டி முடிக்கப்படாது இழுத்தடிக் கப்பட்டு வரும் ஒட்டுசுட்டான் பிரதேசசெயலக இரண்டு மாடிக்கட்டடம். (படம்:கவியரசன்)


# மன்னார் மாவட்ட அபிவிருத்திக்கு 27 இலட்சம் ரூபா ஒதுக்கீடு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் அபி விருத்திக்கென் வன்னி அகதிகள் புனர்வாழ்வு அமைச்சர் 27 இலட்சம் ரூபாவை தனது பன்முகப்படுத்தப் பட்டவரவு செலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கியுள்ளார்.

இதன் மூலம் 58 வேலைத் திட்டங்கள் செய்யப்படவுள்ளதாகவும் இதில் கல்வி,சுகாதாரம், நீர்ப்பாசனம் போன்றனவற்றை அபிவிருத்தி செய்யவும் வீதிப்புனரமைப்பிற்கும் இந்நிதி பயன்படுத்தப்படும் என வீதிகள் அபிவிருத்தி அதிகாரசபை யின் பிரதமபொறியியலாளர் தெரி வித்துள்ளார். (18)

# வீதிவிபத்தில் இருவர் காயம்




கடந்த சனிக்கிழமை ஒட்டுசுட்டான் நீர்ப்பாசன வளாகச் சந்தியில் இடம்பெற்ற வீதி விபத்தில் உந்துருளியில் சென்றுகொண்டிருந்த இரு இளைஞர்கள் காயமடைந்தனர். முத்துஐயன்கட்டைச் சேர்ந்த விமலானந்தராசா (வயது-30),சுசீந்தன் (வயது 21) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர். படம்:-(கவியரசன்)

# மன்.அல்அசார் ம.மகாவித்தியாலயத்தில் புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டல்

(மன்னார்)

மன்னார் அல்அசார் மத்திய மகாவித்தியாலயத்தில் புதிய மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இந்த அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது. இதை வன்னி புனர்வாழ்வு அமைச்சர் ரிஷாட் பதியுதீன் நாட்டினார்.

இதன்போது பாடசாலைக்குரிய விளையாட்டு உப கரணங்களை மேற்படி பாடசாலை அதிபரிடம் கையளித்தார். இதனையடுத்து நகரமண்டபத்திற்கு விஜயம் செய்து தையல் பயிற்சியைமுடித்த இளம் யுவதிகளுக்கு ஐயாயிரம்ரூபா பணமும் வழங்கினார்.

இந்நிகழ்வில் பள்ளிமுனை, உப்புக்குளம், பேசாலை,கரிசல், எருக்கலம்பிட்டி, நானாட்டான், முருங்கன் போன்ற இடங்களைச் சேர்ந்த யுவதிகளுக்கு மேற்படி பணம் வழங்கப்பட்டுள்ளதுடன், மன்னார் மாவட்ட விளையாட்டுக் கழகத்தினருக்கும் விளையாட்டு உபகரணங்களை வழங்கியுள்ளார். இந்நிகழ்வில் மன்னார் அரசஅதிபர் உட்படப்பலர் கலந்துகொண்டனர். (18)

# தொழிற்பயிற்சி நிலையம் ஆட்காட்டிவெளியில் திறப்பு

(மன்னார்)

மன்னார் வாழ்வோதய நிறுவனமும், உலக கனேடிய பல்கலைக்கழக சேவைகள் நிறுவனமும் இணைந்து மாந்தை மேற்குப் பகுதியிலுள்ள ஆட்காட்டி வெளிக் கிராமத்தில் இளைஞர்களுக்குரிய தொழில்பயிற்சி நிலை யம் ஒன்றை திறந்து வைத்துள்ளது. கடந்த சனிக் கிழமை இடம்பெற்ற நிகழ்வில் மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை தொழிற்பயிற்சிக் கட்டடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட வாழ்வோதய இயக்குனர் அருட்தந்தை யேசுராஜா வவு னியா மன்னார் மாவட்ட திட்ட இணைப்பாளர் உட்படப் பலர் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். (18)

# அரசின் அவசரகாலச்சட்ட பிரகடனத்தையடுத்து யாழ்.குடாநாட்டில் படையினரின் கெடுபிடி அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

**நாட்டில் அவசரகாலச்சட்டம் நடைமுறையில் இருப்பதால் குடா நாட்டில் பொதுமக்கள் மீதான சிறிலங்காப் படையினரதும் பொலி சாரதும் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.**

யாழ்.குடாநாட்டில் பல்வேறு பகுதிகளில் இராணுவத்தினரும் பொலிசாரும் சேர்ந்து திடீர் வீதிப்பரிசோதனைகளை மேற் கொண்டு வருகின்றனர். நேற்று முன் தினம் சுன்னாகத்தில் பொலிசாரும் இராணுவத் தினரும் வீதிப்பரிசோதனை மேற்கொண் டதையடுத்து மக்களின் மத்தியில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை நகர்ப்புறத்தை அண்மித்த பகுதிகளிலும் ஏனைய பிரதேசங்களிலும் இராணுவத் தினரின் ரோந்து நடவடிக்கைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இராணுவத்தினரும் பொலிசாரும் திடீர் வீதிப்பரிசோதனைகளை மேற் கொள்வதனால் போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிக்கப்படு வதுடன்அவசரதேவைக்காக செல் பவர்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் யுத்தகாலத் தில் இருந்தது போன்று வீதிச் சோதனைகளை படையினர் ஆரம் பித்து இருப்பதனால் பொதுமக்கள் மத்தியில் பெரும்பீதிநிலை காணப்படுகின்றது. அவசரகால நிலை என்ற பெயரில் இராணுவத்தினால் மேற் கொள்ளப் படுகின்ற செயற்பாட்டினால் தூர இடங்களுக்கு பயணம் செய்வோர் அச்சப்படுவதாக தெரியவருகிறது.

# தனிச்சிங்களத்திலான அ.அட்டை விண்ணப்பப்படிவம்

~மக்கள் முறைப்பாடு

(வடமராட்சி)

சுனாமிஆழிப்பேரலையால் தேசிய அடையாளஅட்டைகளை தொலைத் தவர்கள் அடையாள அட்டைகளை மீளப்பெறும் பொருட்டு தனிச் சிங்கள மொழியிலான விண்ணப்பப்படிவங்களே பொலிசாரால் விநியோகிக்கப்படு கின்றன.

மேற்படி தனிச்சிங்கள மொழியிலான விண்ணப்பப்படிவங்களை பருத்தித் துறை, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையங்களில் மக்களுக்கு பொலி சாரால் விநியோகிக்கப்படுவதையிட்டு பாதிக்கப்பட்டுள்ள மக்கள் விசன மடைந்துள்ளனர்.

இவ் விண்ணப்பப்படிவங்களை மூன்று மொழிகளிலும் அச்சிட்டு விநி யோகிக்குமாறுமக்கள் சம்பந்தப்பட்டதரப்பினரைக் கோரியுள்ளனர். (கா)

# கட்டாக்காலி நாய்கள் பருத்தித்துறையில் அழிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பகுதியில் கட்டாக்காலிநாய்கள் அதிகரித் துள்ளமையால் மக்களின் வேண்டு கோளுக்கிணங்க கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்பட்டு வருகின்றன.கட்டாக்காலி நாய்களின் விபரீதங்களை பருத்தித்துறை சுகா தார அதிகாரியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதையடுத்தே பருத்தித்துறை பிரதேச அமைப் பினரால் மேற்படி நாய்களை நஞ் சூட்டி அழிக்கப்படுகின்றமையால் வீட்டுவளர்ப்புநாய்களைக்கட்டி வளர்க்குமாறுபொதுமக்களுக்கு அறி வுறுத்தப்படுகின்றது. (கா)

# தமிழர் பண்பாட்டை பிரதிபலிக்கும் ஆடைகளை அணிந்துவர யாழ்.மாநகர ஆணையாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர்கந்தசுவாமிகோயில் வருடாந்த உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த ஆலயத் திற்கு வருகை தருவோர் மேற்கத் தேய கலாச்சார உடைகளை அணிந்து வராது எமது பண்பாட்டு விழுமியங்களை பிரதிபலிக்கத்தக்க ஆடைகளைஅணிந்துவரும்படி யாழ். மாநகர சபைஆணையாளர் கலாநிதி க.குணராஜா வேண்டு கோள் விடுத்துள்ளார்.

நல்லூர் திருவிழாவையொட்டி புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்ற எமது உறவுகள் குடா நாட்டிற்கு வருகை தந்துள்ளார்கள். அவர்கள் மேற்கத்தேய கலாச் சாரத்துடன் ஒன்றிப்போய் இருந்த வர்கள் அத்தகைய கலாச்சார உடைகளை அணிந்து வந்து எமது கலாச்சாரத்தை கொச்சைப்படுத்தாது தமிழர் பண்பாட்டு விழுமியங்களை பிரதிபலிக்கின்ற ஆடைகளை அணி ந்து வருவது மிகச்சிறந்ததாகும்.

திருவிழாவிற்கு வருகை தருபவர்கள் ஆடம்பரமாக நகை அணிந்து வருவதை தவிர்த்துக் கொள்வதும் சிறந்ததாகும். திரு விழாக்காலங்களில் பக்தராக திருடர்களும் கோயிலுக்கு வரு வதால் ஆடம்பரமாக நகை அணிந்து வருவதைத்தவிர்ப்பதன் மூலம் திருட்டுச் சம்பவங்களையும் குறைத்துக்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (கீ)

# யாழ்.வலய பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை

வலயக்கல்விப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் அதிகமாகக் காணப்படுவதாக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித் துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பெரும் பாலான பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக்குறை நீண்ட காலமாக நிலவி வருகின்றது. இந்த நிலையில் பட்டதாரி ஆசிரியர் களுக்கான நியமனம் வழங்கப் படுகின்றபோது ஆங்கிலம் கற் பிக்கும் ஆசிரியர்கள் அதிகமானோர் நியமனம் பெறுவார்களாயின் ஓரளவு பற்றாக்குறையை நிவர்த்தி செய்துகொள்ளலாமென அவர் தெரிவித்தார். (கீ)

நேற்றைய தொடர்ச்சி

# போராளிகளின் மனவுறுதியும் தலைவரின் வழிகாட்டலும் கடும் சமர்களைக் கூட வெல்ல வழிவகுத்தது


## 20ஆம் ஆண்டு நிறைவில் மகளிர் படையணி



தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் அணியினரின் பாரியவளர்ச்சிக்கு முக்கிய காரணங்களாக அவர்களின் மனவுறுதியும் உடனுக்குடன் சந்தர்ப்பத்திற்கேற்ப முடிவுகளை எடுக்கின்ற திறனுமே காரணமாக அமைந் திருந்ததோடு தகுந்த சந்தர்ப்பத்திற்கும் தாக்கு தல்களுக்கு மேற்ப எதிர்த்தாக்குதலை நடாத்து வதற்கான தமிழீழ தேசியத்தலைவரின் வழி காட்டல், நெறிப்படுத்தல் என்பனவும் முக்கிய பங்காற்றின.

இவ்வாறு பல சமர்களில் பங்கு பற்றிய போராளியும் தமிழீழ விடுதலைப்புலிகளால் ஆனையிறவு மீட்கப்பட்ட பின் அத்தளத்தை மீளவும் கைப்பற்றும் நோக்கில் எதிரியால் திட்டமிட்டு நடத்தப்பட்ட தீச்சுவாலை சமரில் எதிரியோடு களமாடி சூழவிருந்த போராளிகள் வீரச்சாவடைந்த நிலையிலும் தனித்து நின்றும் எதிரியை தாக்கியழித்த மாலதிபடையணி போராளியான சுகி தனது கள அனுபவத்தை இவ்வாறு பகிர்ந்து கொண்டார்.

தீச்சுவாலை சண்டை என்பது முற் கூட்டியே தலைவரால் எங்களுக்கு சொல்லப் பட்டிருந்தது. இதிலே எதிரி முன்னேறிவந்தால் அதனை எவ்வாறு எதிர் கொள்ள வேண்டு மென்று எங்களுக்கு தலைவரால் பயிற்சிகளும் தரப்பட்டன. 24 ஆம் திகதிநள்ளிரவு 12 மணி யளவிலெல்லாம் எங்களுடைய காப்பரணுக்கு முன்பாக சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. அந்த நேரத்தில் நாங்கள் பராலைட் அடித்து பார்த்துக் கொண்டிருந்தோம். இடைக்கிடை கூடுதலான சத்தங்கள் கேட்ட இடத்திற்கு ஷெல் அடித்துக் கொண்டிருந்தோம். 25 ஆம் திகதி அதிகாலை 5.30 இற்கு எதிரி உடைக்கவென திட்டமிட்ட எல்லாப் பாதையாலும் முன்னேறி வந்து கொண்டிருந்தான். எங்கட படையணிக் குரிய பகுதிகளில் 27 தொடக்கம் 30 ஆம் திகதியான காலப் பகுதிக்குள்தான் உடைவு ஏற்பட்டது. அந்தப் பகுதியில் குயில் என்ற போராளிதான் நின்றார். அவர் தகவல் தரும் அணியைச் சேர்ந்தவர்.அவர் எங்களுக்கு தகவல் களைத் தந்து கொண்டிருந்தார். பெருந்தொகை யான ஆமிவந்து கொண்டிருக்கிறான் அங்கே எத்தனை டாங்கிகள் வருகின்றதென்று எமக்கு தெளிவான தகவல்கள் வந்து கொண்டிருந்தன. அதிலேநின்ற ஒவ்வொரு போராளியும் எதிரியுடன் மூர்க்கமாக சண்டை பிடித்துத்தான் வீரச்சாவடைகிறார்கள். அதாவது எதிரியின் முன்னேற்றத்தினால் எங்களிடமிருந்து விடுபட்ட ஐந்து காப்பரணிலுமிருந்த போராளிகளும் சண்டையிட்டே வீரச்சாவடைந்தனர். நாங்கள் மீண்டும் அந்தக் காப்பரண்களைக் கைப்பற்றிய பின் பார்த்தோம். அங்கே துப்பாக்கியை கூட இறுகப்பிடித்த நிலையில் தான் வீரச்சவடைந் திருந்தார்கள். எங்களுக்கு ஆளணிப் பற்றாக் குறையிருந்தது. அதனால் எமது போராளி களிடம் கூறியிருந்தோம் இந்தச் சண்டையில் நாங்கள் எதிரியை இவ்விடத்திற்கு விடுவோமாக யிருந்தால் ஆனையிறவை எதிரி பிடித்து விடுவான். ஆனையிறவைவிட்டால் நாங்கள் இவ்வளவு உயிர்விலைகொடுத்ததற்கு பெறுமதி யிருக்காது என்பதை போராளிகளுக்கு சொல்லி வைத்தாலும் அவர்களுக்கும் ஒரு ஓர்மம் இருந்தது. என்னவென்றால் கினிகிர 09 இல் லெப் கேணல் மதி அக்காவும் பல போராளி களும் வீரச்சாவடைந்திருந்தனர். அதற்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்று எங்கட படையணிப் போராளிகளுக்கு ஒரு ஓர்மம் இருந்தது. இந்த இடத்தில் வைத்து எதிரிக்கு பதிலடி கொடுக்க வேண்டும். எதிரி எங்களைத் தாண்டிச் செல்வதாகவிருந்தால் நாங்கள் வீரச்சா வடைந்ததன் பின்னர்தான் எங்களைத் தாண்டிச் செல்ல வேண்டும் என்ற உணர்வும் போராளி களிடத்திலிருந்தது. போராளிகள் தொடர்ச்சியாக சண்டை பிடித்துக் கொண்டிருந்தவேளை கப்டன் கோகிலா என்ற பெண் போராளி எதிரி எங்கு எப்படி வருகிறான் என்றெல்லாம் கூறிக் கொண்டிருந்தார்: எதிரி டாங்கிகளின் துணையோடும் முன்னேறிக் கொண்டு தமக்குரிய பைகளையும்,குறிப்பிட்ட பொருட்களையும் சுமந்தபடி ஆனையிறவை மீண்டும் பிடிக்கிற நோக்கோடும், தமது திட்டம் வெற்றியடையும் என்ற நம்பிக்கையோடும் தான் எதிரிவந்தான். அரசால் அவர்களுக்கு சொல்லப்பட்டிருந்தது என்ன வென்றால், குறிப் பிட்டளவு போராளிகள் தான் நிற்கிறார்கள் நீங்கள் இலகுவாக பிடிக்கலாம் இந்த வகையில் உற்சாகத்தை ஊட்டியே அனுப்பினர் ஆனா லும் அவர்களுக்கு சண்டையிடக் கூடிய நிலை இருக்கவில்லை. ஏனென்றால் அந்தளவுக்கு எமது போராளிகளின் மனநிலை உறுதியாக இருந்தது. அதிலும் குயிலின் பங்கு மேலாக இருந்து எவ்வாறென்று சொன்னால் அந்த இடத்தில் எதிரி என்னமாரி உள்ளே நுழை கிறான். எத்தனை டிவிசன் ஆமி போகிறான் என்ற சரியான தகவல்களை தந்து கொண்டி ருந்தார். எதிரி அவர் நின்ற காப்பரணை பிடிக்க குண்டடிக்க அவர் காயப்பட்டு, அவருடன் நின்ற போராளிகள் வீரச்சாவடைந்த நிலையிலும் எறிகணைகள் சூட்டாத ரவைபெற அவரின் தொடர்பும் தகவலும் கிடைத்துக் கொண்டே யிருந்தது. அதனால்தான் இரண்டு மூன்று தடவைகள் முயற்சியெடுத்து எங்களைப் பிடிக்க இயலாமல் போனது. இந்த சமரில் மேஜர் மாலதியின் அணிதான் கைப்பற்றி முன்னேறிச் சென்றது. பின் மீண்டும் பின்வாங்கி அணிகளை மீள் ஒழுங்கு செய்து மீண்டும் காப்பரண்களை பிடித்துக் கொண்டு போகத் தொடங்கினோம். அப்போது எதிரி தான் பகுதிகளை பிடித்த துணிவோடு நின்றான். நாங்கள் மீண்டும் ஆட்லறி, மோட்டார்களின் உதவியோடு அடித்துக்கொண்டு போக ஓர் இரவில் அப்பகுதியைப் பிடித்தோம். ஆனால் அதிகாலை அப்பகுதியை மீண்டும் எதிரி



பிடிக்கிறான். நாங்கள் கைப்பற்றிய அத்தனை அரண்களையும் அவன் பிடிக்கிறான். மீண்டும் நாங்கள் அப்பகுதியை கைப்பற்றுகிறோம். இவ்வாறு 14 தடவைகள் தாச்சிப் போட்டி போன்று எதிரிபிடிப்பதும் பின்னர் நாங்கள் கைப் பற்றுவதுமாக இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்கனவே காயப்பட்ட போராளிகள் மீண்டும் காயப்பட்டு வீரச்சாவடைகின்ற நிலை உரு வாகியிருந்தது. ஏனென்றால் போராளிகள் பற் றாக்குறையாக இருந்தனர். அதனால் காயப் பட்ட போராளி மருந்து கட்டிக் கொண்டு வந்து மீண்டும் சண்டையிட்டு கொண்டிருந்தார்கள்.

எமது போராளிகள் ஒவ்வொருவரும் வீரச்சாவடைய எம்மை அறியாமலேயே எமக் கொரு உத்வேகம் பிறக்கும். எமது கண்ணுக்கு முன்னால் இவர்கள் வீரச்சாவடைகிறார்கள். இத னால் நாங்கள் அடிகொடுக்க வேண்டும் என்ற எண்ணமும் இடத்தை விடக் கூடாது என்ற மனவுறுதியும் இருந்தது.

தொடர்ந்து மூன்று நாட்கள் நலங்கள் சண்டை நடை பெற்றது. அதனால் நாங்கள் தண்ணீரோ, சாப்பாடே எதனையுமே எதிர்பார்க்காமல் சண்டை யிட்டோம். ஒவ்வொருவரும் வீரச்சாவடைய ஆளணி குறைந்து கொண்டு போனாலும் மோட்டார் தாக்குதலின் உதவியோடு நாங்கள் தொடர்ந்தும் கைப்பற்றிக் கொண்டிருந்தோம். கைப்பற்றிய அந்த இடத்தில் கூட நிறுத்து வதற்கு போராளிகள் இருக்கவில்லை. எங்க ளோடு ஆரம்பத்தில் எட்டுப் பேர் நின்று சண்டை யிட்டனர். இவர்கள் எல்லாரும் காயப்பட்டு வீரச்சாவடைந்த ஒரு கட்டத்தில் நான் மட்டும் தனித்து நின்று சண்டையிட்டுக் கொண்டிருக்கும் போது தான் மற்றுமொரு எட்டுபேர் கொண்ட அணி என்னோடு இணைந்தது. அவர்களோடு நாங்கள் மீண்டும் இடங்களை கைப்பற்ற ஏற் கனவே வெடிபொருட்களை வழங்கிக் கொண் டிருந்த சாள்ஸ் அன்ரனி படையணி போராளி களும் இணைந்து நாம் பிடித்தபகுதிகளை தக்கவைத்தனர்.

எங்களுக்கு பக்கத்தில் நின்ற சோதியா படையணியில் இரு போராளிகளே மிகுதியாக இருந்தனர். அவர்களும் எம்மோடு இணைந்து தான் கண்டல் பகுதிவரை கைப்பற்றிக் கொண்டு போனோம். அப்போது கண்டல் கரைப்பகுதியால் 50 மீற்றர் பாதை தான் எதிரியின் வழங்கல் பாதை. அதை தக்க வைப்பதில் எதிரி உறுதி யாக இருந்தான். நாங்கள் இவ்வளவு தூரம் கைப்பற்றியும் அந்த 50 மீற்றர் பாதையை பிடிக்க விடாது நின்ற எதிரிக்கும் எமக்கும் கடும் சண்டை நடைபெற்றது. அதில் எமது முழுப்பலத்தையும் பிரயோகித்து கைப்பற்ற முனைந்தோம். பின்னர் அந்தப் பாதையால் தான் எதிரி பின்வாங்கினான்.




அந்தச் சமரில் ஒவ்வொரு போராளியின் மனவுறுதியும் திடமாக இருந்தது. அதாவது காயப்பட்ட போராளிகள் மீண்டும் சண்டை யிட்டனர். காயங்களில் தசைகள் தொங்கிக் கொண்டிருக்கும் அவற்றை கட்டிக் கொண்டு மீண்டும் சண்டை யிட்டு வீரச்சாவடைந்ததன் விளை வாகத்தான் நாங்கள் தீச்சுவாலை சண்டையை வெல்லக் கூடியதாயிருந்தது. அதாவது வந்த ஆமி தனது பைகளை பதுங்குகுழிகளுக்குள்ளால் இழுத்துக் கொண்டு ஓடும் அளவுக்கு அந்த நிலையிலும் எமது போராளிகள் தாக்குதலை நடத்தினார்கள்.

இதைவிட கண்ணிவெடி பிரிவினரின் கண்ணிவெடித் தாக்குதலிலும் பெருந்தொகை யான படையினர் இறந்தனர். அத்தோடு சினை ப்பர் தாக்குதலில் கண்ணுக்கு முன்னால் குறி பார்த்து சுடச்சுட எதிரிகள் விழுந்த நிகழ்வும் இங்கு நடந்தது. எதிரி எங்களை எந்தப் பகுதியா லாவது திசை திருப்ப முனைந்தும் முடியாமல் போனது. அதாவது எதிரியானவன் தாம் வெற்றி பெறுவோம் என்ற நோக்கோடு ஊடகவியலாளர் களையும் அழைத்துக் கொண்டு தான் இந்தச் சமரை ஆரம்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு தேசியத் தலைவர் எங்களை அழைத்து 25 ஆம் திகதி சண்டை என்பதை 4ஆம் மாதம் 17 ஆம் திகதியே தெரியப்படுத்தி அதற்கு தயார்படுத்துமாறு கூறியிருந்தார். நாங்களும் அதற்குரிய வேகத்தில் செயற்பட்டோம்" எனக் கூறினார்.

இதேவேளை எதிரியுடனான பல்வேறு தாக்குதல்களில் பங்குபற்றியவரும் 2ஆம் லெப் மாலதிபடையணி தாக்குதல்பயிற்சி ஆசிரிய ருமான புரட்சிகா தனது கள அனுபவம் பற்றி இவ்வாறு கூறினார்.





ஓயாத அலை II சமரில் மோட்டார் அணியின் தாக்குதலிலும் பங்குபற்றினேன். மோட்டார் படையணியில் இருந்து செயற்பட்டுக் கொண்டிருந்த வேளை எங்களுக்கென தரப்பட்ட இலக்குகளை வேகமாக தாக்கியழிக்க வேண் டிய நிலை இருந்தது. அதேவேளை அந்த சூழ்நிலைகளுக்கேற்ப வெவ்வேறு முனை களிருந்தும் முன்னேறும் இராணுவத்திற்கெதி ராகவும் தாக்குதலை நடத்தவேண்டிய நிலை உருவானது. இந்த நேரத்தில் எமது வேக மானதும் சரியான இலக்கை நோக்கி எறி கணைகளை செலுத்துகின்ற திறனுமே எமக்கு அவசியமானதாக இருக்கும் அதற்கேற்ப நாங்களும் செயற்பட்டோம், ஆரம்பகாலத்தில் 60 மில்லி மீற்றர் மோட்டார்களையே பயன் படுத்தி தாக்குதல்களை நடாத்தி வந்தோம். காலப் போக்கில் நவீனரக மோட்டார்களையும் இயக்கக் கூடிய வகையில் பயிற்சிகளை பெற்று அதற்கேற்ப தாக்குதல்களை நாடத்தி வந்தோம். இதனால் வேகத்தை அதிகப்படுத்தி சண்டை செய்யக் கூடியதாகவிருந்தது.

இதைவிட ஆனையிறவை கைப்பற்று வதற்கான இத்தாவில் சமரில் பங்குபற்றி யிருந்தேன். அங்கு களத்தில் நின்ற ஒவ்வொரு போராளிக்கும் இருந்த பொறுப்பு என்பது மிக அதிகமாகவே இருந்தது. அதாவது மருத்து வத்திற்கென நிற்கின்ற போராளியும் உடனுக் குடன் தாக்குதல் நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டியிருந்தது.

இத்தாக்குதலில் நாங்கள் எதிரிக்குள் நின்றுதான் சண்டை செய்தோம். அப்போது ஒவ்வொரு போராளியும் எதிரியின் தாக்குதலை எதிர்கொண்டு மிகவும் உக்கிரமாக சண்டையிட வேண்டியநிலை இருந்தது.

இதைவிட வலிச்சக்கர படை நடவடிக் கையில் நாங்கள் நின்ற பகுதிக்கு கண்டல் பகுதியால் மட்டுமே எமக்குரிய வழங்கல் கிடைத்தது. ஏனைய மூன்றுபகுதியும் எதிரி யினுடைய கட்டுப்பாட்டிலிருந்தது. அதை மூடி னால் வெளித்தொடர்பை துண்டிக்கலாம் என்ற நோக்கில் டாங்கிகளுடன் எதிரிமுன்னேறி இரண்டு பகுதியில் ஆமிஉள்ளே வந்தவுடன் ஆமிக்கும் எங்களுக்குமான இடைவெளி மிகக் குறைவாகவே இருந்தது. அந்தவேளை தான் எம்மோடு நின்ற போராளிகள் எதிரியினுடைய எறிகணைகளைபறித்து எதிரிக்கு அடித்தனர். கைகளால் அடித்து எதிரியை வீழ்த்திய சம்ப வங்களும் இடம் பெற்றது. எதிரியை நாங்கள் தாக்கியபோது பின்வாங்கி ஓடிக்கொண்டிருந்த வனின் துப்பாக்கியையே பறித்து அவனுக்கு சுடவேண்டிய நிலையும் எமக்கேற்பட்டது எனக் கூறினார். இவ்வாறு எதிரியானவன் ஈழத்தமிழ்ப் பெண்களை இழிவுபடுத்தி அடக்கி ஒடுக்க முட்பட்ட போதெல்லாம் அவர்களும் பொங்கி யெழுந்த வீர உணர்வுகளை வெளிப்படுத்த களமாக அமைந்தது தமழீழவிடுதலைப் புலிகளின் மகளிர் படையணி. (தொடரும்)

இ.சசிக்குமார்




08 பிரதியமைச்சர் மேர்வின் சில்வா இந்திய வம்சாவளி மக்களுக்கெதிராக அண்மையில் வெளியிட்ட அவதூறு கருத்துரைகளைக் கண்டித்தும் அவரை பதவியிலிருந்து விலகுமாறு கோரியும் அனைத்து தமிழ்க் கட்சிகளும் மக்களும் இணைந்து மாபெரும் கண்டனப் பேரணியொன்றை கொழும்பில் நடத்தினர்.



யாழ். இணுவிலில் வைத்து இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டதைக் கண்டித்து திருகோணமலை,வவுனியா ஆகிய இரு மாவட்டங்களிலும் துக்கம் அனுஷ்டிப்பு.

அரசியல் போராளிகள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இயங்குவதற்கான சரியான புறநிலையை அமைத்துக்கொடுப்பது அரசின் கடப்பாடு. போர்நிறுத்தம் சரிவரப் பேணப்படுவதற்கு இது முக்கியமானது என அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு நோர்வே அரசின் வெளியுறவுத்துறை துணை அமைச்சர் விதார் ஹெல்கேசன், நோர்வே வெளியுறவுத்துறை அமைச்சின் உயர் அதிகாரிகளான மக்னீருட் மற்றும் சொல்பரி அம்மையார் ஆகியோர் அன்ரன் பாலசிங்கம் அவர்களையும், அவரது துணைவியார் திருமதி அடேல் பாலசிங்கம் அவர்களையும் லண்டனிலுள்ள வதிவிடத்தில் சந்தித்து இலங்கை அரசியல் நிலவரம் குறித்துக் கலந்துரையாடியபோது தெரிவித்தார்.

09 கோமாரி 01,களுகொள்ள, நலன்புரி நிலையத்தில் வாழும் ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் தமது அடிப்படை வசதிகளை வலியுத்தியும் தாம் தமிழர்கள் என்பதால் அரச அதிகாரிகளால் இனரீதியாக புறக்கணிப்படுவதாகவும் குற்றம் சாட்டி ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியதோடு வீதிமறியல் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.



10 அம்பாறையிலுள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதியான காஞ்சிரங்குடாவில் போராளிகள் இருவர் வான் ஒன்றில் வந்த ஆயுததாரிகளால் சுட்டுக்கொலை.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சந்திப்பொன்று அம்பாறை மாவட்டம் பாவட்டாவிலுள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் துறை அலுவலகத்தில் இடம் பெற்றது.

எங்கள் தேசத்தில் எங்களுடைய மக்கள் இறைமையோடும்,கௌரவத்தோடும் வாழும் சூழ்நிலை உருவாக வேண்டும் அதற்கான வழி வகைகளை எமது கையில் எடுத்தே தீருவோம். இதை ஒரு போதும் சிங்கள தேசம் தடுக்க முடியாது. தடுக்க முனைந்தால் இலங்கைத்தீவு ஒரு போதும் அமைதிப்பூங்காவாக இருக்க முடியாது. இவ்வாறு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி பொன் விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் தெரிவிப்பு.




தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியின் 20 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மூத்த போராளிகள் ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.




அம்பாறை காஞ்சிரங்குடா முகாமுக்கு வடக்கே உள்ள கல்லியந்தீவு விசேட அதிரடிப் படை முகாம் பொதுமக்களால் எரியூட்டப்பட்டது.

அரசினால் முன்னெடுக்கப்படும் மேல் கொத்மலை நீர் மின் திட்டத்தை நிறுத்தக் கோரி தலவாக்கலையில் ஆறு இளைஞர்கள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர்.




11 மட்டக்களப்பு அம்பாறை மாட்டங்களில் அண்மைக்காலங்களில் இடம்பெற்று வரும் சம்பவங்கள் தொடர்பாக தமது நிலைப்பாட்டை இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு விரிவாக விளக்கியிருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்டுடன் இடம்பெற்ற சந்திப்பின் பின் செய்தியாளர்களிடம் தெரிவிப்பு

திருகோணமலை மாவட்டம் மல்லிகைத்தீவு சந்தியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுப் சம்பவத்தில் கடற்படையிலிருந்து தலைமறைவான இருவர் பலி.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற தனியார் பேருந்துகள் மீது சிங்களக் காடையர்கள் மேற்கொண்ட தாக்குதலின் போது ஐந்து பேருந்துகள் சேதமடைந்ததுடன் பயணிகள் சிலரும் காயமடைந்தனர்.

யாழ். சிறைச்சாலையில்தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் உயிரிழப்பு.



12. சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர் கொழும்பில் அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொலை.

கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளரும் அமைச்சர் ஒருவரின் உதவியாளராக செயற்பட்டவருமான வர்ணகாந் சமரசிங்க சுட்டுக் கொலை.

அம்பாறை மாவட்டம் தெஹியத்தை கண்டியவில் இனந்தெரியாத நபர்கள் பதுங்கியிருந்து மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் சர்ஜன்ட் ஒருவர் பலி.

திருமலையில் துறைமுக அதிகார சபையின் இறங்குதுறை, அஷ்ரப் இறங்குதுறை, பிரிமா இறங்குதுறை, இந்தியன் எண்ணெய் நிறுவனத்தின் இறங்குதுறை ஆகிய துறைகளில் பாரிய இராணு ஒத்திகை ஒன்று சிறிலங்காவின் முப்படைகளாலும் மேற்கொள்ளப்பட்டது.

வானொலி அறிவிப்பாளர் ரேலங்கி செல்வராஜா மற்றும் அவரது கணவர் செல்வராஜா ஆகியோர் கொழும்பில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை.

13 அம்பாறை-திருக்கோவில் சிறிலங்கா பொலிஸ் நிலையம்மீது இனந்தெரியாதோரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

ஏ-9 வீதி ஓமந்தை-முகமாலைப் பகுதிகள் ஊடான போக்குவரத்தை நண்பகல் வரை படையினர் தடுத்துவைத்தனர்.

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்கொலை தொடர்பாக தமிழ் தம்பதியினர் கொழும்பில் கைது.

அம்பாறையில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் ஒன்பது விவசாயிகள் கைது.

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கான மக்களின் போக்குவரத்தையும், வாகனப் போக்குவரத்தையும், கட்டைபறிச்சான், மஹிந்தபுர ஆகிய இடங்களில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் தடுத்தனர்.

14. ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடியூடாக பொதுமக்களும், விடுதலைப் புலிகளும் பயணம் செய்வதற்கு சிறிலங்காப் படையினரால் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டதுடன் முற்பகல் சோதனைச் சாவடி சில மணி நேரம்மூடப்பட்டு போக்குவரத்துக்கள் முடக்கப்பட்டது. கிளிநொச்சிக்கு வரவிருந்த வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் உட்பட போராளிகள் சிலர் இராணுவத்தினரால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

மட்டக்களப்பு நகரிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகம் மீது இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அம்பாறை மாவட்டம், மட்டக்களப்பு-கல்முனை வீதி பாண்டிருப்புச் சந்தியில் சிறிலங்கா பொலிஸ் சோதனைச் சாவடி மீது இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீச்சுத்தாக்குதல் நடத்தப்பட்டது.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேசத்தில் விடுதலைப் புலிப்போராளியொருவர் உட்பட நால்வர் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் கைது.

நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சர் விதார் ஹெல்கேசன் லண்டனில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப்பேசினார்.

# கதிர்காமரின்கொலைக்கு ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம்

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டதை ஐரோப்பிய ஒன்றியம் வன்மையாகக் கண்டித்திருக்கிறது. அதே சமயம் அமைதி முயற்சிகள் இலங்கையில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டுமென்றும் அது வலியுறுத்தியிருக்கிறது.25 அங்கத்துவ நாடுகளைக் கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமையை பிரிட்டன் வகிக்கின்றது. இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினைகளுக்கு வன்முறை ஒரு தீர்வாகாது என்றும் ஒன்றியம் சுட்டிக்காட்டியிருக்கிறது. வன்முறைக்கெதிரான மக்கள் ஒன்றுபட்டு இறுதியாக இடம்பெற்ற இந்த தீவிரவாத செயலினால் போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தமும் அமைதி முயற்சிகளும் பாதிக்கப்படாமலிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் தனது அறிக்கையொன்றில் கேட்டுள்ளது.

# யதார்த்த ரீதியில் சிந்திப்பதன் மூலமே நாட்டுத்தலைவர்களைப் பாதுகாக்க முடியும்

*ஐ.தே.க.பா.உ. பீரிஸ் தெரிவிப்பு*

யதார்த்த ரீதியில் சிந்தித்து நாட்டுத்தலைவர்கள் செயற்படுவதன் மூலமே நாட்டுத்தலைவர்களின் உயிர்களைப்பாதுகாக்க முடியுமென ஐ. தே. க. தெரிவித்துள்ளது.

நாட்டிலிருந்து கொலைக்கலாசாரத்தை அகற்றுவதற்கு கட்சிகள் மத்தியில் ஒற்றுமை ஏற்பட வேண்டியது அவசியம் எனவும் அக்கட்சி தெரிவித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜி. எல். பீரிஸ் இது தொடர்பாக கருத்துரைக்கையில்;அண்மையில் தாம் மல்வத்த மற்றும் அஸ்கிரிய மகாநாயக்கர்களை சந்தித்தபோது இது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது என்றும்,யதார்த்தமான ரீதியில் சிந்தித்து நாட்டுத்தலைவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், இதன் அடிப்படையிலேயே நாட்டுத்தலைவர்களின் உயிர்களைப் பாதுகாக்கமுடியும் என்றும் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். (32)

# உத்தரவாதம் இல்லாத மேல் கொத்மலை திட்டத்தை ஆதரிப்பது எமது சமூகத்திற்குச் செய்யும் துரோகம்

*— சந்திரசேகரன்*

(கொழும்பு)

மேல் கொத்மலை திட்டத்தினூடாக தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களின் வரைபடத்தையே மாற்ற வேண்டுமென்பதே பிரதான நோக்கமாயிருக்கிறதென, மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திர சேகரன் தலவாக்கலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது;

தமிழ் மக்கள் பயனடையக் கூடாது என்பதற்காகவே காமினி திசாநாயக்க ஆற்று நீரை கடலுக்குத் திருப்பினார். இன்று தலவாக்கலை நீர்த்தேக்கம் அமைக்கப்படுவதும், அவரின் திட்டமே. அன்று அவரால் தலவாக்கலையில் இருந்து டயகம வரையில் உள்ள தோட்டங்களுக்குச் செல்லமுடியாமல் இருந்தது. அந்தளவிற்கு மலையகத் தமிழ்மக்கள் இப்பிரதேசங்களில் செறிவாகவும் உணர்வோடும் இருந்ததே இதற்குக் காரணம்.

எம்மக்களின் செறிவினை குறைத்து அதில் குளிர்காய வேண்டும் என்பதற்காக அவர் மெரேயாவில் பெரியளவிலான நீர்த்தேக்கத்தைக் கட்டத் தீர்மானித்தார். ஆனால் அது கை கூடவில்லை அதன் தொடர்ச்சியே தலவாக்கலை அணைத்திட்டம்.இத்திட்டத்தினால் நேரடியாகவும் மறைமுகமாகவும் மக்கள் பாதிக்கப்படவுள்ளனர்.

ஆனால், இதனால் ஏற்படப்போகும் மறைமுகமான பாதிப்புக்கள் பற்றி நாம் தீவிரமாக கவனம் செலுத்த வேண்டும். மேல் கொத்மலை திட்டம் ஆரம்பிக்கப்பட்டால் ஏற்படப்போகும் மண்சரிவு,சூழல் மாசடைவு, நில நடுக்கம் ஆகியவை பற்றி புவியியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இத்திட்டத்தினால் ஏற்படும் சமூக சீர்கேடு, சிறுபான்மை மக்களின் வாழ்வியல் முறையில் சிக்கல் , பாதுகாப்பு போன்ற அடுத்தகட்ட பாதிப்புக்கள் பற்றியும் அச்சம் ஏற்பட்டுள்ளது.எனவே, அரசாங்கம் தன்னிச்சையாக எதையுமே செய்யாமல் இதனை மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக இதன் அனுகூலங்கள், பிரதிகூலங்களை ஆராய்ந்து முடிவெடுப்பதற்காக மலையகத்தின் அரசியல், தொழிற சங்க,சமூக அமைப்புக்களோடு பேச்சுவார்த்தை நடாத்தி இவ்விடயங்களை பகிரங்கப்படுத்த வேண்டும்.

தவறினால்மலையகத்தில் இதற்கான போராட்டங்கள் வெடிப்பதைத் தடுக்க முடியாது என தெரிவித்தார்.

# கருணா குழு உறுப்பினர் சுட்டுக்கொலை

பொலநறுவ மாவட்டம் அரலங்கவில பிரதேசத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு கருணா குழு உறுப்பினரொருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கொல்லப்பட்டவர் நாமல் பொக்கண வாசியான மாதவராசா பிரபு என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். உறவினர்கள் மூவருடன் வயலுக்குச் சென்று திரும்பும் போது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது என அரலங்கலில் சிறிலங்கா பொலிசார் தெரிவித்தனர்.

## ஆங்கில மொழி மூல முன்பள்ளி திறப்பு விழா

இடம்:– ஆங்கில முன்பள்ளிக் கட்டடம்,
தண்ணீரூற்று,முள்ளியவளை

காலம்:– 19. 08. 2005 (வெள்ளி) மு.ப 9.15

பிரதம விருந்தினர்:– கௌரவ ச. கனகரட்ணம்
(வன்னி மாவட்ட பா.ம.உ)

**எமது பிரதேச கல்வி வளர்ச்சியில்
அக்கறை செலுத்திவரும் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்**

அமைப்புக்குழு

மழலைகள் வாயில் ஆங்கிலம் தவழ–எங்கள்
மண்ணினில் அறிவின் கதவுகள் திறக்க
வாழ்த்துகிறோம்

விளம்பர அனுசரணை

தரமான புடவைவகைகளுக்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்

**கோசலா புடவைமாளிகை**

நாகரிக புடவை உலகின் முன்னோடிகள்.

(6550) தண்ணீரூற்று,முள்ளியவளை

## குண்டுவெடிப்பில் குழந்தை பலி

கொக்கரல்லவில் உள்ள வீடொன்றில் இடம் பெற்ற குண்டுவெடிப்பில் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்றுள்ளது. எனினும் இந்தக் குண்டு எவ்வாறு இங்குகொண்டுவரப்பட்டது என்ற விடயம் இதுவரை வெளியாகவில்லை. (32)

## தம்புள்ள சந்தியில் மல்லாவி வாசி கைது

முல்லைத்தீவு மல்லாவி வாசியொருவர் நேற்று திங்கட்கிழமை தம்புள்ள சந்தியில் வைத்து சிறிலங்கா பொலிசாரால் கைது செய்யப்பட்டு உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சின்னையா முருகேசு (வயது-54)என்ற இந்நபர் கொழும்பிலிருந்து கண்டிக்குப் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருக்கையிலேயே இந்தக்கைது இடம் பெற்றுள்ளது.

## புதிய உளவளத்துணையாளர்களை உள்வாங்குதல்

### நேர்முகத்தேர்வு

அன்னை இல்லத்தில் புதிய உளவளத்துணையாளர்களை இணைத்துக்கொள்வதனை முன்னிட்டு கோரப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 20.08.2005 (சனிக்கிழமை) காலை. 9.00 மணிக்கு அன்னை இல்ல மண்டபத்தில் நடைபெறும் என்பதை சகல விண்ணப்பதாரிகளுக்கும் அறியத்தருகின்றோம்.

குறிப்பு:–

விண்ணப்பித்த சகல விண்ணப்பதாரிகளும் சகல ஆவணங்களு டன் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

(6547) நிர்வாகம், அன்னை இல்லம்

## வலயக் கல்வி அலுவலகம்–துணுக்காய்

## கேள்வி அறிவித்தல்

துணுக்காய் வலயக் கல்வி அலுவலக பாடசாலை கட்டட நிர்மாண வேலைகளுக்கான அரக்கிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் இக்ராட் (ICTAD) தரம் ஒன்பது அல்லது அதற்கு மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடம் இருந்து கோரப்படுகின்றன. கேள்வி விண்ணப்பங்கள் வலயக் கல்வி அலுவலக கேள்விச்சபை தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

18.08.2005ஆம் திகதி தொடக்கம் 25.08.2005 ஆம்திகதி வரை கேள்விப்பத்திரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் தலைவர், கேள்விச்சபை,வலயக்கல்வி அலுவலகம், துணுக்காய்,மாங்குளம் என்ற முகவரிக்கு 30.08.2005 பி.ப.ஒரு மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். அன்று மாலை 3.30 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விதாரர்களோ அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்டவர்களோ கேள்விப் பத்திரங்கள் திறக்கும் போது பிரசன்னமாக இருக்க முடியும். மேலதிக விபரங்கள் எமது அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

வேலை விபரங்கள்

| இல | வேலை விபரங்கள் | மீளளிப்பு வைப்பு | மீளளிக்கப் படாத வைப்பு |
|---|---|---|---|
| 01 | மு/கருவேலங்கண்டல் அ.த.க.பா கட்டட நிர்மாணம் 80'X 25' | 26500.00 | 250.00 |
| 02 | மு/கல்விளாங்குளம் அ.த.க.பா கட்டட நிர்மாணம் 80'X 25' | 26500.00 | 250.00 |
| 03 | மு/ஆரோக்கியபுரம் த.வி கட்டட நிர்மாணம் 80'X 25' | 26500.00 | 250.00 |
| 04 | மு/ஒட்டுசுட்டான் ம.வி கட்டடத்திருத்தம் 80'X 33' | 12700.00 | 250.00 |
| 05 | மு/ஒட்டுசுட்டான் ம.வி கட்டடத்திருத்தம் 50'X 30' | 3500.00 | 250.00 |

ஏ. ஜே. குரூஸ்,
தலைவர்,
கேள்விச்சபை,
வலயக்கல்வி அலுவலகம்,
துணுக்காய்.

(சி.12559)

## கட்டடங்களுக்கான அனுமதி

கரைச்சிப் பிரதேசசபை எல்லைக்குள் (கரைச்சி, கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள்உட்பட)புதிதாக அமைக்கப்படும் கட்டடங்கள், கிணறு கள்,மதில்கள், குழாய்க்கிணறுகள் அமைப்பதற்கும் பாரிய குழிகள் தோண்டுவதற்கும் கரைச்சிப் பிரதேசசபையின் அனுமதியை தவறாது பெற்றுக் கொள்ள வேண்டும். அனுமதி பெறாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொன்.நித்தியானந்தன்,
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேசசபை,
கிளிநொச்சி.

(சி.12558)

## தமிழீழ தேசியத்தொலைக்காட்சியின்

த தே தொ
NTT

## திருத்தப்பட்ட தொழினுட்பத் தகவல்

**Satellite: Eurosat Ku 45°E**
**Azimuth :258°**
**Frequency: 11506 Mhz**
**Symbol rate :2.894 MS/s**
**Polarity :Vertical**
**FEC: 3/4**

மின்னஞ்சல்: info@tamilntt.com T.P. No. 0212285816

(சி.12555)

## அதாவுல்லாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

பொத்துவில் மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கட்டட அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொள்ளவிருந்த கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் அதாவுல்லாவுக்கு எதிராக பொத்துவிலில் பொதுமக்கள் ஹர்த்தால் அனுஷ்டித்ததுடன் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். பொத்துவில் நேற்று முன்தினம் பொதுமக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஹர்த்தால் ஆர்ப்பாட்ட பேரணியின் போது வீதிகளில் டயர்கள் போட்டு எரிக்கப்பட்டதுடன் வர்த்த நிலையங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் பாடசாலைகள், சந்தைகள் வங்கிகள் யாவும் மூடப்பட்டன.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு எட்டுமாத காலமாகியும் பாதிக்கப்பட்ட பொத்துவில் மக்களுக்கு எவ்வித நிதி ஒதுக்கீடுகளும் செய்யாது இப்போது தனது அரசியல் இலாபம் தேடும் முயற்சியில் வருகை தரும் அமைச்சரை எக்காரணம் கொண்டும் விடமாட்டோம் எனப் பொது மக்கள் வீதியின் குறுக்கே அமர்ந் திருந்தனர். இதனால் அமைச்சர் அதாவுல்லா தனது வரு கையை இரத்துச் செய்துகொண்ட தையடுத்து பொதுமக்கள் ஆர்ப்பாட் டததைக் கைவிட்டமை குறிப்பிடத்தக்கது.

## அறிவித்தல்
## மணல் அனுமதி

கரைச்சிப் பிரதேசசபைப்பிரிவிற்குள் உடனடியாகச் செயற்படும் விதத்தில் மணல், கற்கள்,கிறவல் ஆகியவற்றினை அகழ்வதற்கும், கொண்டு செல்வதற்கும் பிரதேச சபையின் அனுமதி தவறாது பெற்றுக்கொள்ள வேண்டும். அனுமதியெதுவும் பெறாதவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அளவுக்கதிகமாக மணல், கற்கள்,கிறவல்களை அகழ்வது இயற்கை வளத்தினைப் பாதிக்கின்றது.

பொன். நித்தியானந்தன்
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேசசபை,
கிளிநொச்சி. (சி.12557)

## இயல விற்பனை

காலம்:-2005-08-21


இடம்..........................

பொருள் விரிப்பு ..............................

(சி.12561) மேலதிக விபரம் நாளை எதிர் பாருங்கள்.

## அழைப்பிதழ்

### செம்மலை, அளம்பில் மத்திய மருந்தகம் திறப்பு விழா



இடம்:- மத்திய மருந்தகம்,
செம்மலை,அளம்பில்.
திகதி:- 18.08.2005 வியாழக்கிழமை
நேரம்- காலை.11.30 மணி
(6549) அன்புடன் அழைக்கின்றோம்.

## முதலாவது அகவை நிறைவில்




கனகராயத்தைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இந்திரகுமார் சுபாஜினி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி செல்வி. நினுஜா அவர்கள் தனது முதலாவது பிறந்த நாளை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் 17.08.05 இன்று வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, கனகராயன்குளத்தில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

கனகராயன்குளம்,
தெற்கு, வவுனியா.
தகவல்,
சி. கந்தசாமி,
(6548) பேரன்.

### தமிழீழ நுண்கலைப்பிரிவின்
# "கிளிநொச்சி நுண்கலைக்கல்லூரி"

ஆரம்பம்:- 19. 08. 2005-வெள்ளி-நிறைநிலா நாள்-காலை 10. 00 மணி
இடம்:- நுண்கலைக்கல்லூரி வளாகம் (காவல்துறை நடுவப்பணியகத்திற்கு பின்புறமாக) ,திருநகர் பிரதான வீதி,கிளிநொச்சி.

## ஆரம்பமாகவுள்ள கலைப்பிரிவுகளும், எமது வளஅணியினரும்

**வாய்ப்பாட்டு-** சங்கீத பூஷணம் திரு.ச. பாலசிங்கம்.
(இசைப்பட்டதாரி அண்ணாமலை பல்கலைக்கழகம்)
இசைக்கலைமணி திருமதி.கௌரி மகேந்திரன்
(இசைப்பட்டதாரி யாழ். பல்கலைக்கழகம்)
இன்னிசை வேந்தர் திரு.சோ. உமாரமணன்.
(இசைப்பட்டதாரி. தமிழ்நாடு அரசினர் தமிழிசைக் கல்லூரி)

**வயலின்-** இசைக்கலைமணி திரு.சு.கோபிதாஸ்
(இசைப்பட்டதாரி-யாழ்.பல்கலைக்கழகம்)
சங்கீத பூஷணம்-திருமதி.தர்மபூபதி சிதம்பரநாதன்.
(இசைப்பட்டதாரி.அண்ணாமலை பல்கலைக்கழகம்)

**மிருதங்கம்-** இசைக்கலைமாணி-திரு.க.கண்ணதாசன்
(இசைப்பட்டதாரி-யாழ்.பல்கலைக்கழகம்)

**நடனம்-** நடன கலாவித்தகர் திருமதி.சாம்பவி கண்ணதாசன்
(ஆசிரிய தராதரப் பத்திரம்-சிறப்புத்தேர்ச்சி)

**தபேலா-** பிரபல தபேலாக் கலைஞர்-திரு.இரா.சிவராமன்

**ஓகன்-** இசையமைப்பாளர்-திரு.ஸ்ரீகுகன்.
இசையமைப்பாளர்-இசைப்பிரியன்.

**கீற்றார்-** பிரபல கலைஞர்-திரு.டா.அமல்ராஜ் (பாப்பா)

**அழகுக்கலைப் பயிற்சி** திருமதி.தே.வனஜா
(மனையியல் டிப்ளோமா)

**ஓவியம்-** திரு.ரமணாகரன்
(தே.க.கல்லூரி-யாழ்ப்பாணம்)

**நாடகமும் அரங்கியலும்-** திரு.தயாபரன்-
(தே.க.கல்லூரி-மட்டக்களப்பு)

**குறிப்பு- பெயர் பதிந்தவர்களையும்,புதிதாக இணையவிரும்புகிறவர்களையும்,19.08.2005 காலை 9.30 க்கு கல்லூரிக்கு சமுகம் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.**

(சி-12560)

*இசைக்கலைமணி
திரு.சு.கோபிதாஸ்,
அதிபர்,
கிளி/நுண்கலைக் கல்லூரி.*

## 15 வயதுப் பிரிவு கடினப்பந்துப் போட்டி மத்திய கல்லூரி அணி வெற்றி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி 15 வயதுப் பிரிவினருக்கிடையே இடம்பெற்ற கடினப்பந்துப் போட்டியின் இரண்டாம் சுற்றில் யாழ். மத்திய கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் பாடசாலை களுக்கு இடையே நடத்திவரும் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் சுற்றுப் போட்டியொன்றில் மத்திய கல்லூரி வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

முதலில் விளையாடிய மகாஜனாக் கல்லூரி அனைத்து இலக்கு களையும் இழந்து 37 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

ஆகக்கூடிய ஓட்டங்களாக செந்தூரன், சகதீபன், பிரதாபன் ஆகியோர் முறையே ஒன்பது, ஒன்பது, ஆறு ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

மத்திய கல்லூரி வீரர்களான மயூரன், கோபிகன், சிவகரன் ஆகியோர் முறையே ஆறு, மூன்று, ஒன்று என இலக்குகளைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி 251 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைத்து இலக்குகளையும் இழந்தனர்.

இதில் மத்திய கல்லூரியைச் சேர்ந்த சிவகரன் 86, ஜேம்ஸ் ஜான்சன் 42, மயூரன் 25 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக் கொண்டனர்.

மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த கஜதீபன், அமிர்தாபன், ஜபாகர் ஆகியோர் முறையே நான்கு, மூன்று, ஒன்று என இலக்கு களைக் கைப்பற்றிக் கொண்டனர்.

இரண்டாவது இனிங்சில் மகாஜனாக் கல்லூரி 117 ஓட்டங்களை எட்டு இலக்குகளை இழந்து பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது. மகாஜனாக் கல்லூரி சார்பில் புவிதரன், அமிர்தாபன், பிரதாபன் ஆகியோர் 21, 14, 14 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் தனுகஜன், மயூரன் ஆகியோர் முறையே ஆறு, ஒரு இலக்குகளைக் கைப்பற்றினர். (41)

## விளையாட்டு அபிவிருத்திச் சங்கம் நடாத்தும் கழகங்களுக்கிடையிலான மென்பந்துப் போட்டி

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சங்கம் நடாத்தும் விளையாட்டுப் போட்டிகளில் மென்பந்து கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 19, 20,21ஆம் திகதிகளில் தருமபுரம் இளந் தாரகை விளையாட்டு மைதானத்திலும், 27, 28, ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்திலும் நடைபெற வுள்ளன.

எனவே கிளிநொச்சி, முல்லை. மாவட்ட விளையாட்டுக் கழகங் களைத் தயாராகுமாறு விளையாட்டு அபிவிருத்திக் குழுவினர் கேட்டுள்ளனர்.

## யாழ். மாவட்டத்தில் முதல் தடவையாக 26 அணிகள் பங்கேற்கும் கடினப்பந்துப் போட்டி

யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக 26 அணிகள் கலந்து கொள்ளும் கடினப் பந்து துடுப்பாட்டப் போட்டியொன்றை சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினர் நடத்துகின்றார்கள்.

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதரவுடன் அமரர் ஜெகசோதி துஸ்யந்தன் ஞாபகார்த்தமாக ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழகம் இப்போட்டிகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடக்கூடியதாகும்.

இப்போட்டிகளில் முதல் தடவையாக பல புதிய கழகங்கள் விளையாடத் தொடங்கியுள்ளதுடன் வவுனியா மாவட்டத்திலிருந்து நான்கு கழகங்களும், கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து ஒரு அணியும் கலந்து கொள்கின்றன.

இது தவிர்ந்து வடமராட்சியில் இருந்து முதல் தடவையாக கழுகுகள் அணி கடினப்பந்துப் போட்டியில் கலந்து கொண்டுள்ளது.

இதே போன்று வலிகாமத்தில் இருந்து மூன்று புதிய கழகங் களும் கலந்து கொள்கின்றன. (41)


## முன்பள்ளி நிகழ்வு





ஒட்டுசுட்டான் கோட்டமட்டத்திலான முன்பள்ளி களுக்கிடையேயான கலைநிகழ்வு போட்டிகள் கடந்த 15ஆம் திகதி காலை பத்து மணிக்கு ஒட்டுசுட்டான் கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது. பதினொரு முன்பள்ளிகள் கலந்து கொண்டதில் அருணா, பண்டாரவன்னியன், பரந்தாமன், தசன் ஆகிய முன் பள்ளிகள் வலயமட்ட போட்டிக்காக தெரிவு செய்யப பட்டுள்ளன. (05)

## அணி பாரிய இழப்பை சந்திக்கும் என நினைத்தேன் பிரெட்லீ, மெக்ராத் காப்பாற்றிவிட்டனர்




-பொண்டிங்

ஆஷஸ் தொடரின் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இறுதி நாளான நேற்று ஆட்டம் முடிய 24 பந்து வீச்சுகள் மீதமிருந்த நிலையில் 156 ஓட்டங்களைப் பெற்று தான் ஆட்டமிழந்தபோது தனது அணி பாரிய இழப்பை சந்திக்குமென தான் எண்ணியதாக அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ரிக்கிபொண்டிங் குறிப்பிட்டுள்ளார்.

மயிரிழையில் இங்கிலாந்திடமிருந்து தப்பிப் பிழைத்த அவுஸ்திரேலிய அணித்தலைவர் மேலும் குறிப்பிடும்போது; தான் கடுமையாக பாடுபட்டதால் அணியை தலைநிமிர வைத்ததாகக் கூறினார். இறுதி இணைப்பாட்டத்தில் மெக்ராத், பிரட்லீ இருவரும் பிளிண்டொப்பினதும், ஹார்மிசனதும் பந்து வீச்சுக்கு எதிராக போராடி இங்கிலாந்து அணியின் வெற்றியை தகர்த்துவிட்டதாகத் தெரிவிக்கும் பொண்டிங், கெய்டன், மார்ட்டின், கில்கிறிஸ்ட் ஆகியோரின் துடுப்பாட்டமும், கிளெஸ்பியின் பந்து வீச்சும் போதிய ஆதரவைத் தரவில்லை என்று கூறியதுடன், இறுதி இரு போட்டிகளிலும் ஒருசில மாற்றத்தைக் கொண்டு வரலாம் என நம்புவதாகத் தெரிவித்துள்ளார்.

## அனைத்துத் துறையிலும் தமது வீரர்கள் திறமையாக செயற்படுகின்றனர்

### மைக்கல்வோன்



இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் ஆஷஸ் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் அனைத்திலும் தனது அணி வீரர்கள் திறமையாக செயற்படுவதாக அணித்தலைவர் மைக்கல்வோன் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.




தற்போதைய நிலையில் தொடர் ஒன்றுக்கு ஒன்று என்ற சமநிலைக்கு கொண்டு வந்தமை, இரண்டாவது போட்டியில் வீரர்கள் காட்டிய திறனிலேயே தங்கியிருந்த தாகவும் தற்போது அனைவரும் நல்ல ஒரு போட்டியில் ஆடி வருவதாகவும் அன்ருபிளின்டொப் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் முடிவடைந்த மூன்றாவது போட்டி ஏமாற்றமளித்தாலும் இனிவரும் இரு போட்டிகளிலும் வீரர்களின் திறமை அதிகரிக்குமென அவர் கூறியுள்ளார்.

## ஆஷஸ் கிண்ண இறுதி நாள் ஆட்டம் காணவந்த 10,000 ரசிகர்கள் ஏமாற்றம்




இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் சரித்திரபூர்வ ஆஷஸ் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடரில் மூன்றாவது போட்டியின் இறுதி நாளான நேற்று முன்தினம் ஆட்டத் தைக் காணவந்த பத்தாயிரம் ரசிகர்கள் அனுமதிச்சீட்டு கிடைக்காததால் திரும்பிவிட்ட தாகத் தெரிவிக்கப்படுகிறது.

பரபரப்பான இறுதி நாள் ஆட்டத்தைக் காண முதல் நாள் இரவே அனுமதிச் சீட்டுப்பெற வரிசையில் ரசிகர்கள் காத்திருந்த தாகவும், இது போன்ற கூட்டத்தைத்தான் ஒருபோதும் காணவில்லை என்வும் லங்காசயர் கிரிக்கெட் கழகத்தலைவர் ஜிம் கம்பஸ் தெரிவித்துள்ளார்.

இவர்கள் ஆட்டத்தைக் காண வசதியாக வும், இழப்பை ஈடு செய்யவும் இங்கிலாந்து வேல்ஸ் கிரிக்கெட் சபை நகர மத்தியில் பாரிய தொலைக்காட்சி திரை ஒன்றை ஏற்பாடு செய்திருந்ததாகவும், எனினும் பொலிசாரினால் இது தடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. வழங்கப்பட்ட 19ஆயிரம் ஆசனங்கள் நிறைந்து விட்டநிலையில் ரசிகர்களை வரவேண்டாம் எனத்தடுத்தபோதும் முடியாதுபோன நிலையில் வாயில் கதவை பூட்டிவிட்டதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

## நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் சிம்பாப்வே 231 ஓட்டங்கள் குவிப்பு



சிம்பாப்வேயில் நடைபெறும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் முதல்நாளான நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவில் நியூசிலாந்து அணி தனது முதல் இன்னிங்கில் இரண்டு விக்கெட்டுக்களையிழந்து 48 ஓட்டங் களைப் பெற்றிருந்தது நியூசிலாந்து அணி சிம்பாப்வே சென்று அங்கு கிரிக்கெட் போட்டிகளில் ஆடி வருகிறது. இரண்டா வது போட்டியில் முதலாவது இன்னிங்சை ஆரம்பித்த சிம் பாப்வே அணி 231 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது. இதில் அணித்தலைவர் தைபு 76 ஓட்டங்களையும், மாவயா 42 ஓட்டங்களையும், எப்ராகிம் 37 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர். மீண்டும் அணிக்குத் திரும்பிய கீத் ஸ்ரீக் முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார். பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பில் ஷேன் பொண்ட் 51 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுகளையும் விட்டோரி இரு விக்கெட்டுகளையும் பிராங்லின், மார்டின் இருவரும் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

## முக்கிய வீரர்கள் பங்கேற்காதபோதும் ஆசிய அணி வெற்றிபெறும்


### சங்கக்கார




இன்று தென்னாபிரிக்காவில் ஆரம்பமாகும் ஆபிரிக்க-ஆசிய கிரிக்கெட் அணிகள் பங்குபற்றும் சர்வதேச ஒரு நாள் நலநிதிக் கிரிக்கெட் தொடரில் ஆசிய அணி சார்பில் முக்கிய வீரர்கள் பங்குபற்றாதபோதும் அவ்வணி வெற்றி பெறுவது உறுதியென சிறிலங்காவின் விக்கெட் காப்பாளரும், துடுப்பாட்ட வீரருமான குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.ஆசிய அணியில் ராகுல் ராவிட், சனத் ஜெயசூரிய, சமிந்தவாஸ் ஆகியோர் இடம்பெறவில்லை.

இப்போட்டி பற்றி மேலும் கருத்துத் தெரிவித்த சங்கக்கார, சுனாமி ஏற்பட்ட பின்பு இவ்வாறான போட்டிகள் நடைபெறுவதாகவும், அவை பாதிக்கப்பட்டோருக்கான உதவி வழங்க நடைபெறுவதாகவும், ஆனால், இந்தப் போட்டி இரு கண்டங்களினதும் கிரிக்கெட் விளையாட்டை மேம்படுத்த உதவும் என்றும் தெரிவித்துள்ளார். மூன்று ஒரு நாள் போட்டிகளுக்கும் சர்வதேச தகுதி வழங்கப்பட்டுள்ளது.

## ராபெல் நாடல் சம்பியன்






கனடாவிலுள்ள மான்ட்ரில் நகரில் ரோஜர்ஸ் கோப்பைக்கான டென்னிஸ் போட்டி நடந்து வந்தது. நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் ஸ்பெயின் வீர் ராபெல்நாடல் - அமெரிக்க வீரர் ஆன்ட்ரி அகாசி இருவரும் மோதினார்கள்.

இதில் இருவருக்கும் இடையே போட்டி கடுமையாக இருந்தது. முதல் செட்டை நாடல் கைப்பற்றினார். ஆனால் அடுத்த செட்டில் அகாசி போர்க்குணத்துடன் போராடி அதை எடுத்துவிட்டார். மூன்றாவது செட் ஆட்டத்தில் நாடல் அபாரமாக சர்வீஸ் போட்டு அகாசியை திக்குமுக்காட வைத்தார். அந்த செட்டை கைப் பற்றி கடைசியில் நாடல் 6-3, 4-6, 6-2 செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானார்.

அவர் வெற்றி பெற்றதும் மைதானத்தில் படுத்து உருண்டு தனது மகிழ்ச்சியை வெளிப் படுத்தினார். அவருக்கு ரோஜர்ஸ் கோப்பை பரிசளிக்கப்பட்டது.

அமெரிக்காவிலுள்ள லொஸ்ஏஞ்சல்ஸ் ஓப்பன் டென்னிஸ் போட்டி நடைபெற்று வந்தது. அதில் பெல்ஜியம் வீராங்கனை கிம்கிலிஸ்டர் சும்,சுலோவாக்கியா வீராங்கனை ஹட்ச்னோவா வும் மோதினார்கள். கிம்கிலிஸ்டர்ஸ் மிக எளிதாக அதாவது 6-4, 6-1 செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கோப்பையை தட்டிச் சென்றார்.

## சிந்தனைக்கு



நாங்கள் ஒரு உன்னத இலட்சியத் திற்காகப் போராடி வருகிறோம். அந்த இலட்சியத்திற்காக உழைப்பதும் வாழ்வதும் எங்களுக்குப் பூரண ஆத்ம நிறைவைத் தருகிறது.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 17.08.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@yahoo.com


# வேடங்கள் கலையும் வேளை

சனாதிபதித்தேர்தல் இவ்வாண்டிலேயே நடத்தப்படுதல் வேண்டும் எனத் தேர்தல் ஆணையாளர் தனது முடிவைத் தெளிவாகவே கூறிவிட்டார். உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் இதனை அவர் உறுதி செய்துள்ளார்.

தேர்தல் ஆணையாளர் இதற்கு முன்னொரு சந்தர்ப்பத்தில் சனாதிபதித்தேர்தல் குறித்து பிரஸ்தாபிக்கையில், “ஒரு சட்டையைப் போட்டுவிட்டு பின்னர் அதனை அலுமாரியில் மடித்து வைத்துவிட்டு சில காலத்தின் பின் போட்டால் அது புதுச்சட்டை ஆகமாட்டாது” எனக் கூறியிருந்தாராம்.

அவ்வேளையிலேயே தேர்தல்ஆணையாளர் சனாதிபதித் தேர்தல் இவ்வாண்டுதான் என்ற முடிவிற்கு வந்துவிட்டார் என்றே கொள்ள முடியும். ஆகையினால் இனி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் சிலவே பாக்கியுள்ளன. அதாவது சனாதிபதித்தேர்தலை எதிர்கொள்வதற்கு- அதாவது சனாதிபதி பதவியைத் துறந்து செல்வதற்குத் தயாராவது -அடுத்த தேர்தலை எதிர்கொள்வதற்கு கட்சியைத் தயார்படுத்துவது.

சிலவேளை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தேர்தல் ஆணையாளரின் முடிவை எதிர்த்து உயர்நீதிமன்றிற்குச் செல்லலாம். ஆனால்,அவ்வாறானதொரு முயற்சியை அவர் மேற்கொள்வார் என எதிர்பார்ப்பதற்கான சமிக்ஞைகளும் குறைவாகவே உள்ளன. ஏனெனில், தேர்தல் எப்பொழுது என்பது குறித்து ஏற்கனவே அவர் உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையைக் கோரியிருப்பதால் இனியும் ஒரு தடவை அத்தகைய முயற்சி ஒன்றிற்கு அவர் செல்வார் என எதிர்பார்ப்பதற்கில்லை.

சிலவேளை சனாதிபதி சந்திரிகாவின் தேர்தல் எப்பொழுது என ஏற்கனவே கேட்டுக்கொண்டதற்கிணங்க உயர் நீதிமன்றம் அடுத்த ஆண்டில் எனக் கூறுமேயானால், தேர்தல் தொடர்பான சர்ச்சை நீடிக்கப்படலாம். மறுபுறத்தில் ஐ.தே. கட்சி நீதிமன்றம் செல்லலாம்.

இதேசமயம், இத்தகையதொரு வழக்கு தாக்கல் செய்யப்படுமானால் அதில் பிரதம நீதியரசர், விசாரணையின்போது நீதிபதிகள் வரிசையில் இருக்க முடியாத நிலை அன்றி இருக்கக்கூடாது என்ற நிலை உருவாகுவது தவிர்க்க முடியாத தாகவே இருக்கும். ஏனெனில் சனாதிபதி சந்திரிகா மூன்றாவது பதவிப்பிரமாணத்திற்குச் சாட்சியமாக பிரதம நீதியரசரே உள்ளார்.

இது ஒரு புறமிருக்க சனாதிபதித்தேர்தலை இவ்வருடம் நடத்துவதனால் சனாதிபதி சந்திரிகா பாராளுமன்றத் தேர்தலையும் சனாதிபதித்தேர்தலையும ஒன்றாக நடத்துவதா அன்றி சனாதிபதித்தேர்தலை மட்டும் நடத்துவதா என்பது குறித்து ஏற்கனவே தீவிரமாக ஆராய்ந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


சனாதிபதி சந்திரிகாவின் இத்தீர்மானமானது தனியாக ஆட்சியைக் கைப்பற்றுதல் துறத்தல் என்பதுடன் மட்டும் சம்பந்தப்பட்டதொன்றல்ல. இது அவரின் எதிர்கால அரசியல், பண்டாரநாயக்க குடும்பத்தின் எதிர்கால நலன் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டதாகும். சுருக்கமாகக் கூறுவதானால்,பண்டாரநாயக்க குடும்பத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் முடிவாகவே இருக்க முடியும்.

அடுத்ததாகத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வதென்பது அதாவது தனித்தா – பொ.ஐ. முன்னணி என்ற ரீதியிலா – அன்றி ஜே.வி.பி. யுடன் மீண்டும் ஒரு கூட்டணி சேர்ந்து எதிர்கொள்வதா? என்பதாகும். இவ்விடயத்தில், சுதந்திரக்கட்சியின் எதிர்காலம் குறித்து அவர் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய நிலையில் உள்ளார் எனலாம்.

ஜே.வி.பி யுடன் கூட்டொன்றை வைத்து தேர்தலை எதிர்கொள்வதையே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷ விரும்புவதாகத்தெரிகின்றது. ஆனால், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னர் பட்ட அவமானம் போதும் என்ற நிலையிலேயே உள்ளார்போல் தெரிகின்றது.

அதுமட்டுமன்றி ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்வதனால் சர்வதேசத்தின் முன்பாகத் தாம் இட்டுள்ள வேடத்தையும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலைக்க வேண்டியதாவே இருக்கும். அதாவது பொதுக்கட்டமைப்பு, சமாதான முயற்சிகள் என்பனவற்றிற்கு ஆதரவு என அவர் வெளிக்காட்டிவரும் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டாக வேண்டிவரும்.

எது எவ்வாறாயினும் சனாதிபதித்தேர்தல் இவ்வாண்டு என உறுதிப்படுத்தப்படுமானால் சிறிலங்காவின் அரசியலில் பல மாறுதல்களும், திருப்பங்களும் விரைவிலேயே அரங்கேறும் என எதிர்பார்க்கலாம். இதில் பலர் புதிய வேடம் போடலாம். பலர் தமது வேடங்களைக் களைந்து தமது சுயரூபத்தைக் காட்டலாம். ஆயினும் தேர்தல்கள் அடிக்கடி வருவதால் இவை சற்று சுவாரசியம் குறைந்தவையாக மாறியிருப்பினும், இம்முறைத் தேர்தலின் காட்சிகளும் மாறலாம் என எதிர் பார்க்கப்படுவதால் ஓரளவு மக்களைக் கவர்ந்தவையாகவே இருக்கும்.




# கதிர்காமரின் அயல் வீட்டில் வேலைசெய்த 7 தமிழ் இளைஞர்கள் தேடப்படுகின்றனர்

லக்ஷ்மன் கதிர்காமரைப் படுகொலை செய்த கொலையாளிகள் மறைந்திருந்த அயல் வீட்டில் வீட்டுப்பணிகளுக்கு என வந்து சென்ற ஏழு தமிழ் இளைஞர்களைக் கைது செய்வதற்கு பொலிசார் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தமிழ் இளைஞர்கள் கடந்த ஒருவருட காலமாக வீட்டு வேலைகளுக்கு என மாறி மாறி வந்துள்ளனர். இவர்கள் இந்த வீட்டில் மிகக் குறுகிய காலமே பணியாற்றியுள்ளனர் என்றும் பகல் வேளைகளிலேயே இவர்கள் இந்த வீட்டிற்கு வந்து சென்றுள்ளனர் என்றும் பொலிஸ். விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வேலைக்காரர்களின் போர்வையில் இவர்கள் இங்கு வந்து உளவு பார்த்திருக்கலாம் எனப் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

அமைச்சரைக் கொலை செய்தோர் தங்கியிருந்ததாகக் கூறப்படும் வீட்டு உரிமையாளரும் அவரின் மனைவியும் தங்களுக்கு மேல்மாடியில் நடந்த எதுவும் தெரியாதென்று கூறியுள்ளனர். எனினும் அவர்களின் கூற்றை ஏற்க முடியாதெனப் பொலிசார் தெரிவிக்கின்றனர். இதுவரை பொலிசார் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து அமைச்சரைக் கொலை செய்ய இரண்டு இடங்களில் மறைந்திருந்து தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளது தெரியவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குளியலறையில் இருந்து தாக்குதல் நடத்துவதென்றும், அது தவறினால் மொட்டை மாடியிலிருந்து தாக்குதல் நடத்துவதென்றும் இவர்கள் திட்டமிட்டிருந்துள்ளனர். எனினும் அங்கிருந்து பார்க்கும் போது நீச்சல்குள இலக்கை தெளிவாகப் பெற்றுக் கொள்ள உயர்ந்து வளர்ந்துள்ள மரங்கள் தடையாக இருந்துள்ளன.

இந்த மரங்களின் கிளைகள் வெட்டி அப்புறப் படுத்தப்பட்டுள்ளன. இது குறித்து வீட்டு உரிமையாளரிடம் வினவிய போது வீட்டுத்தோட்டத்தை துப்புரவு செய்த நபர் அதனை வெட்டியிருக்கலாம் எனக் கூறியுள்ளார்.

தாக்குதலை மேற்கொண்டவர்கள் மேல் மாடியிலிருந்து குதித்து தப்பியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# கதிர்காமர் கொலை தொடர்பில் இதுவரை 60 பேர் கைதாகினர்

## -150 இற்கும் மேற்பட்டோரிடம் விசாரணை

(கொழும்பு)

சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இதுவரை 60 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 150 இற்கும்மேற்பட்டோரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள என.நேற்றும் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. பம்பலப்பிட்டி, தெகிவளை, களனி, வெள்ளவத்தை,. முகத்துவாரம், புறக்கோட்டை, கிராண்ட்பாஸ், மருதானை, வத்தளை, கொட்டாஞ் சேனை மற்றும் கோட்டை ஆகிய பகுதிகளில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை இதுவரை 150 பேரிடம் வாக்கு மூலங்கள் பெறப் பட்டுள்ளபோதும் இதுவரை உறுதியான தகவல் எதையும் பெறமுடியவில்லையெனப் பொலிசார் கூறுகின்றனர். (32)

# நகரில் கலகம் விளைவித்த காட்டு யானை சுட்டுக்கொலை

அம்பாறை நகரத்தில் கலகம் ஏற்படுத்திய காட்டு யானை ஒன்று சுட்டுக்கொல்லப்பட்டுள்ளது. இந்த யானை அம்பாறை நகருக்கு சென்ற மக்களை துன்புறுத்திக் கொண்டிருந்தமையால் நகரில் அமைதியின்மை காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந் நிலையில் இந் யானையின் தாக்குதலில் தாயும் மகளும் உயிரிழந்துள்ளதுடன் இன்னும் மூன்று பேர் காயம் அடைந்துள்ளனர். நகரின் பல வீடுகளுக்கும் உந்துருளிகள், மோட்டார் வாகனங்கள் என்பவற்றிற்கு சேதம் விளைவித்ததாக பொலிசார் தெரிவித்துள்ளனர். இதன் பின் வீடொன்றுக்குள் புகுந்து குழந்தை ஒன்றைத் தாக்க முற்பட்ட வேளையே துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக அம்பாறை பொலிசார் அத்தியட்சகர் ஜெயந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (32)

# ஒக்ரோபர்–15இற்குள் நிரந்தர நியமனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் அனைத்து ஆங்கில ஆசிரியர்களுக்கும் வரும் ஒக்ரோபர் பதினைந்தாம் திகதிக்கு முன்னர் நிரந்தர நியமனத்தினை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கல்வி அமைச்சு அதிகாரிகளுக்குப் பணித்துள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் விசாகலிங்கம் கூறியுள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் கடந்த வாரம் நடைபெற்ற வடக்குக்கிழக்கில் கல்வி நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக நடத்தப்பட்ட கூட்டத்திலேயே சனாதிபதி அதிகாரிகளை இவ்வாறு பணித்ததாக அவர் கூறினார்.ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய 230 ஆங்கில ஆசிரியர்களுக்கு சமீபத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டதாகவும் இன்னும் ஐந்நூறு பேர் வரை எஞ்சி இருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

# தடயப்பொருட்களை பகுப்பாய்வுக்கனுப்ப கொழும்பு நீதவான் உத்தரவு

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையின் பின்னர் கைப்பற்றப் பட்ட தடயப்பொருட்களை அரசாங்க இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி அறிக்கையைப் பெறுமாறு கொழும்பு பிரதான நீதவான் சரோஜினி குசலா வீரவர்த்தன நேற்றுமுன்தினம் குற்றப்புலனாய்வு துறையினருக்கு உத்தரவிட்டார். அமைச்சர் கொலை செய்யப்பட்டமையை அடுத்து குறித்த இடத்திலிருந்து எட்டு தடயப்பொருட்கள் பொலி சாரால் கைப்பற்றப் பட்டன. இதில் கிரனைட் லோஞ்சர் உட்பட்ட ஆயுதங்கள் அடங்கியிருந்ததாகப் பொலிசார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இரண்டு கைக்குண்டுகளும் அங்கு கைப்பற்றப் பட்டதாகத் தெரிவித்த பொலிசார் அவற்றை செயலிழக்கச்செய்த பின்னர் இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்புவதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை லக்ஷ்மன் கதிர்காமரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தை புகைப்படம் எடுத்ததாகக் குற்றம் சுமத்தப்பட்ட தமிழ் இளைஞர்கள் இருவரையும் எதிர் வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதவான் உத்தரவிட்டார். (32)

# சனாதிபதிக்கு அடுத்து பெரியளவில் பாதுகாப்பு வழங்கப்பட்ட கதிர்காமர் கொல்லப்பட்டது எவ்வாறு?

## – ஆராய வேண்டியுள்ளதென்கிறார் ரணில்

(கொழும்பு)

லக்ஷ்மன் கதிர்காமர் கொலை தொடர்பாக பல்வேறு மட்டங்களில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இவ்வளவு பலத்த பாதுகாப்பின் மத்தியில் இந்தக் கொலை எவ்வாறு நடைபெற்றதெனவும் ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவிலே நேற்று நடைபெற்ற கூட்டத்தின் போதே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் அங்கு உரையாற்றுகையில; வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. சனாதிபதிக்கு அடுத்தபடியாக கதிர்காமருக்கே பெரியளவில் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. அந்நிலையில் எவ்வாறு இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இது பாதுகாப்புத் துறையிலுள்ள பாரிய குறைபாடுகளைத்தான் காட்டுகின்றது. அது நிவர்த்திக்கப்பட வேண்டும் எனவும் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

ஆனால் இவ்வாறானதொரு அச்சுறுத்தல் இருப்பதாக பொலிஸ்மா அதிபர் கதிர்காமருக்கு அறிவுரை வழங்கியதாகக் கூறியுள்ளார்.

இதேவேளை இவ்வாறான இடங்களுக்குச் செல்லவேண்டாமென புலனாய்வாளர்கள் கதிர்காமரிடம் கூறியதாகவும், அவர் அதை செவிமடுக்கவில்லையெனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

நான் நினைக்கின்றேன் அவர் மீது குறை கூறமுடியாது என்று. எனக்குத் தெரிந்தவரையில் கதிர்காமர் தன் பாதுகாப்புக் குறித்து தனது பாதுகாப்புப் பிரிவினருடன் கலந்துரையாடியுள்ளார். ஆனால் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனையை பாதுகாப்புப் பிரிவினர் நடைமுறைப்படுத்தாதது ஏன்?

இது ஒரு பாரிய வினாவாகும். சிலர் தமக்குப் பொலிசாரால் பாதுகாப்பு வழங்கப்படவில்லை, தமக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பும் அகற்றப்பட்டுள்ளதாகக் கூறுகின்றார்கள். இது அவ்வாறானதொரு நிலை அல்ல. ஒவ்வொருவருக்கும் தமது உயிரைப் பாதுகாக்கும் உரிமையுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறானதொரு நிலை இடம்பெறாமல் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

நாம்பாதுகாப்பு பிரிவு வைத்திருப்பது உயிர்போன பின்பு அழுவதற்காக அல்ல உயிலைப் பாதுகாப்பதற்காகவே என்றார் ரணில் விக்கிரமசிங்க.

# இராணுவ வாகனம் மோதியதில் வயோதிப மாதுவின் இடதுகால் முறிந்தது

## – யாழ்.தபாலகம் முன் சம்பவம்

(நல்லூர்)

இராணுவ வாகனம் வருவதை அவதானித்து வீதியோரம் ஒதுங்கிய வயோதிப பெண்ணின் காலின் மேல் இராணுவ ரக் ஏறியதனால் இடதுகால் முறிந்துள்ளது. நேற்று நண்பகல் 11.30 மணியளவில் யாழ்ப்பாணம் தபால்கந்தோருக்கு முன்பாக இவ் விபத்து இடம்பெற்றது.

வேம்படி முதலாம் குறுக்கு வீதியைச் சேர்ந்த சியோன் இராணி (வயது - 65 ) என்பவரே இவ்விபத்தில் காயமடைந்தவர் ஆகும்.

இராணுவ வாகனம் வரும்போது கைகளில் பேரப்பிள்ளையுடன் வந்த இவ் வயோதிப மாது பேரப்பிள்ளையையும் அணைத்தபடி வீதியில் நின்றதாகவும் அப்போது இராணுவ வாகனம் காலில் ஏறியதாகவும் தெரிவித்தார்.

பலத்த சத்தமிட்ட போதிலும் இராணுவத்தினர் தம்மை வாகனத்தில் இருந்து விடுவிக்கவில்லையெனவும் அதேநேரம் குறிப்பிட்ட இடத்தில் ஆட்டோ வைத்திருக்கும் இளைஞர்களே ஓடி வந்து வைத்தியசாலைக்கு கொண்டு வந்ததாகவும் தெரிவித்தார்.

உரிய இடத்திற்கு விரைந்து வந்த அதிக எண்ணிக்கையான பொலிசாரும் இராணுவத்தினரும் தமது சகாக்களையும் அழைத்துக் கொண்டு விரைவாக பொலிஸ் நிலையத்திற்கு சென்றார்கள். (41)

# நாளை இரு கூட்டங்கள்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் வழமைபோல் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கும், அதனைத் தொடர்ந்து மாவட்ட கடற்றொழில் அபிவிருத்திக் குழுக் கூட்டம் காலை 11.00 மணிக்கும் நடைபெறும். எனவே, சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி. இராசநாயகம் தெரிவித்துள்ளார். (கு,தீ)

# உயர் பாதுகாப்பு வலயங்களைச் சேர்ந்த மக்களை வேறிடங்களில் குடியமர்த்துவது பின்னடைவை ஏற்படுத்தும்

## -யாழ் வெகுசன அமைப்புகளின் ஒன்றியம் அறிக்கை

(வடமராட்சி)

சிறிலங்காப்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள உயர்பாதுகாப்பு வலயப்பகுதி மக்களை வேறு இடங்களில் நிரந்தர வீடுகளை அமைத்து குடியேற்ற மேற்கொள்ளப்படும் முயற்சிகள் நீண்ட கால நோக்கில் பாரிய பின்னடைவுகளையேற்படுத்துமென யாழ். மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் குற்றஞ்சாட்டியுள்ளது.

குறிப்பாக உலக வங்கியினால் அமுல்படுத்தப்படும் வீடமைப்புத் திட்டங்கள் நிரந்தர காணிகளைக் கொண்டிருப்பவர்களுக்கே அமுல்படுத்தப்படுகின்றது. இந்நிபந்தனையினை ஏற்று உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்கள் பலரும், வேறிடங்களில் காணிகளை கொள்வனவு செய்வதுடன், உலக வங்கியின் நிதியுதவியுடன் அங்கு வீடுகளையும் அமைத்துவருகின்றனர்.

எனினும் அவர்களது குடியிருப்புப் பகுதிகளிற்கான போக்குவரத்து வீதிகளோ, மின்சார வசதிகள் மற்றும் குடிநீர் உள்ளிட்ட வசதிகள் ஏதும் உருவாக்கப்படவில்லை.

இவ்வாறானதோர் நிலையில போதிய அடிப்படை வசதிகளைக் கொண்ட உயர்பாதுகாப்பு வலயப் பகுதியினுள் உள்ள தாயகப்பிரதேசங்களைக் கைவிட்டு ஏனைய பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்களை நிரந்தரமாக மீளக்குடியமர்த்த மேற்கொள்ளப்படும் முயற்சிகளை ஒன்றியம் கண்டித்துள்ளது.

குறிப்பாக அரியாலை மற்றும் கொழும்புத்துறைப்பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக வெளியேற்றப்பட்ட மக்கள் நெடுங்குளம், தரவைப்பகுதியில் மீளக் குடியமர்த்தப்படுவதையும் சுட்டிக் காட்டியுள்ளது.

இவ்வாறானதோர் சூழலில் உயர்பாதுகாப்பு வலயத்தை விடுவிப்பதற்கான ஒட்டுமொத்த மக்களினது கோரிக்கைகளும் பிசுபிசுத்துப் போய் விடுமெனவும் நிரந்தர தீர்வொன்றின் பின்னர் விடுவிக்கப்படும் இவ்வுயர் பாதுகாப்பு வலயப்பகுதிகளிலுள்ள காணிகள் பயன்படுத்தப்பட முடியாதாகி விடுமெனவும் ஒன்றியம் மேலும் தெரிவித்துள்ளது. (27)

### மகிந்த...

நிலவரம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது நோர்வே தரப்பில் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன், பிரதி வெளிவிவகார அமைச்சர் வீதார் ஹெல்கேசன், இலங்கைக்கான நோர்வேத தூதுவர் கான்ஸ்பிரஷ்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மீன்பிடி இறங்குதுறைகளை ஆழமாக்கும் பணி மீண்டும் ஆரம்பம்

(வடமராட்சி)

வடமராட்சி கடற்பரப்பில் தடைப்பட்டுப்போயிருந்த மீன்பிடி இறங்குதுறைகளை (வான்) ஆழப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக பருத்தித்துறையின் முனைப்பகுதியில் ஆரம்பமாகி ஆழப்படுத்தும் பணிகள் அடுத்து பொலிகண்டிப்பகுதியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி இறங்குதுறைகளை ஆழப்படுத்த பயன்படுத்தப்பட்ட கனரக வாகனம் பழுதடைந்ததையடுத்தே இப்பணிகள் தடைப்பட்டிருந்தது, எனினும் உதவி அமைப்புக்கள் சில புதிய கனரக வாகனங்களை எடுத்து வந்துள்ளதையடுத்தே மீண்டும் தடைப்பட்ட பணிகள் ஆரம்பமாகவுள்ளது.

எனினும் தற்போதைய சூழலில் படைத்தரப்பு அனுமதியை வழங்குமா? என்றஅச்சம் மீனவ சங்கங்களிடையே எழுந்துள்ளது. (27)

# சுனாமியால் மீன்பிடி உபகரணங்களை இழந்த கிளி.ஊ.பு. சங்க அங்கத்தவர்களுக்கு உதவி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வு சங்கத்தினரால் வடமராட்சி கிழக்கு பகுதியில் சுனாமியால் மீன்பிடி உபகரணங்களை இழந்த பதினாறு அங்கத்தவர்களுக்கு மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

நோர்வே நாட்டினைச் சேர்ந்த நலன்விரும்பிகள் சிலரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஒவ்வொன்றும் சுமார் முப்பதாயிரம் ரூபா பெறுமதியான பதினாறு பொதிகளில் மன்பிடிக்குப் பயன்படுத்தப்படும் வலை உள்ளிட்ட பல பொருட்களே நேற்று மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வானது நேற்றுக் காலை பத்து மணியளவில் கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்க வளாகத்தில் கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்றது.

கருத்துரைகளை அருட்தந்தை பெனட், அரசசார்பற்ற இணைய தலைவர் கணேசபிள்ளை ஏ.எஸ்.பி நிறுவனப் பிரதிநிதி கத்தரின் ஆகியோர் வழங்கினர்.

தொடர்ந்து மீன்பிடி வலைகளை பொன். நித்தியானந்தன், கணேசபிள்ளை, அருட்தந்தை பெனட், ஏ.எஸ்.பி பிரதிநிதி கத்தரின், அருட்சகோதரி லூட்ஸ் ஜோசப் ஆகியோர் வழங்கி வைத்தனர். (கு)

### சீர்செய்ய....

இன்று நெருக்கடிக்குள்ளாகிக் கொண்டிருக்கிறது. எங்களுடைய அரசியல் போராளிகளினுடைய பாதுகாப்பில் இருந்து மக்களுக்கு இயல்பு நிலை கொண்டு வருவதில் இருந்து எல்லாவிடயங்களையுமே அரசாங்கம் இழுத்தடித்து இன்று மக்கள் மத்தியில் ஒரு விரக்தி நிலையும் ஒரு நெருக்கடி நிலையும் ஏற்படுத்திக் கொண்டு வருகின்ற சூழலில் எவ்வளவு தூரம் இது முன்னேற்றமடையும் என்பது எங்களுக்குப் புரியாத நிலையில் தான் இருக்கின்றது. அனுசரணையாளர்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் நாங்கள் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றோம்.எங்களுடைய மக்களினுடைய மனிதாபிமானப் பிரச்சினைகள், அடைகின்ற நெருக்கடி மற்றையது யுத்தநிறுத்த உடன்பாட்டில் இப்படியான நெருக்கடிகள் உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆகவே, இவை உடனடியாகச் சீர்செய்யப்பட வேண்டும். இலங்கை அரசாங்கமும் படைத்தரப்பும் அர்ப்பணிப்புடன் செயற்படும் சூழ்நிலையில்தான் நிச்சயமாக இது ஒரு சரியான சூழ்நிலைக்குவரும் என்று நாங்கள் நம்புகின்றோம் என்றார்.

லக்ஷ்மன் கதிர்காமரின் மரணம் சமாதான வழிமுறைக்குப் பாதகத்தை ஏற்படுத்துமா? என அவரிடம் கேட்டபோது,

அது ஒரு பெரிய பாதிப்பைக் கொண்டுவரும் என நாங்கள் நினைக்கவில்லை. ஏனெனில், அது ஒரு அமைச்சரினுடைய கொலை. அதுவும் தலைநகரில் நடந்திருக்கின்றது. எங்களைப் பொறுத்தவரையில் இது ஒரு உள்விவகாரமாக - மிகவும் ஆழமாக ஆராயப்பட வேண்டிய ஒரு விடயமுமாகும். ஏனெனில், சிறிலங்காவினுடைய அரசியல் தலைமைத்துவத்திற்கான போட்டிகள், முரண்பாடுகள் அண்மைக்காலமாகத் தீவிரம் அடைந்திருக்கின்றது. இதனுடைய வெளிப்பாடாகவும் இருக்கலாம்.

மற்றையது மிக மிக உயர்ந்ததொரு பாதுகாப்புக்குட்பட்டிருந்த ஒருவர் மிக இலகுவாகக் கொலை செய்யப்பட்டிருக்கின்றார். இதனால், அவர்களுடைய உள்ளகப் பாதுகாப்பு நிலைப்பாடுகளிலும், அவர்களினுடைய முரண்பாடுகள், அவர்களுடைய அரசியல் மோதல்களுக்கு பின்னாலுள்ள உண்மை நிலைகளைக் கண்டறிய வேண்டிய நிலைப்பாடு இருக்கின்றது. இதனைக் கொண்டுவந்து இரண்டு தரப்பினருக்கும் இடையிலுள்ள பிரச்சினை ஆக்கத் தேவையில்லை. இது சிறிலங்காப் படைகளுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும்-தமிழர்களுடைய தாயகப் பிரதேசத்திற்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்பாடு. இது இரண்டு தரப்பினருக்கும் இடையிலான மீறல் அல்ல. அங்கே நடந்த ஒரு சம்பவத்திற்கு அவர்கள் அந்த உண்மை நிலைகளை கண்டறிய வேண்டும். கொலையாளிகளைக் கண்டறிய வேண்டும். - கொலையினுடைய பின்னணிகளைக் கண்டறிய வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கின்றது. இதனைக் கொண்டு வந்து தமிழ் மக்களினுடைய பிரச்சினையோடோ அல்லது யுத்த நிறுத்த உடன்பாடு- அமைதி முயற்சிகளோடோ இணைத்துப் பார்க்க வேண்டியது அவசியமற்றதெனவே தான் கருதுவதாகவும் தமிழ்ச் செல்வன் அவர்கள் கூறினார்.

லக்ஷ்மன் கதிர்காமர் அவர்களின் கொலையில் உங்களுக்குச் சம்பந்தம் இல்லை என்று நீங்கள் உறுதியாகத் திரும்பத் திரும்பக் கூறினாலும் உங்களுடைய மறுப்பினை சர்வதேச சமூகம் முழு நம்பகத்தன்மை கொண்டு ஏற்றுக்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. இந்நிலையில் உங்களினுடைய மறுப்பினை வெளிநாட்டுச் சக்திகள், சமாதானத்தில் ஈடுபட்டுள்ள நாடுகள் ஏற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கின்றதா? எனத் தமிழ்ச் செல்வன் அவர்களிடம் கேட்டபோது,

நிச்சயமாக ஏற்றுக்கொள்ளப்படும். இந்தக் கொலைக்கும் கொலையாளிகள் கொலையின் பின்னணிகள் என்பன விசாரணைகளின் பின்னால் வெளிப்பட வேண்டும்.

ஏனெனில், இது சிறிலங்காவினுடைய உயர் பாதுகாப்பு வலயம் என்று சொல்லப்படுகின்ற முழுக் கண்காணிப்புக்குட்பட்ட அவர்களினுடைய கோட்டைக்குள்ளேயே நடந்திருக்கின்றது. ஆகவே இதனுடைய உண்மைநிலைகள் கொலையாளிகள் பற்றியும் கொலையின் பின்னணிகள் பற்றியும் தெரிய வேண்டும் என்பது. அங்கே சட்டம் ஒழுங்கைப் பேணுகின்ற அரசினுடைய பொறுப்பு. இதனை அவர்கள் தட்டிக் கழிக்க முடியாது. உடனடியாகவே கொலை நடந்த உடனேயே புலிகள் மீது குற்றத்தைச் சுமத்திவிட்டு கொலையாளிகளையோ, கொலையின் நோக்கங்களையோ தட்டிக்கழித்து விடுவது அவர்களினுடைய நோக்கமாக இருந்தால் அவர்களால் கண்டறிய முடியாது.

இந்தக் கொலைக்கான பின்னணி என்னவென்கின்ற உண்மை நிலைகளைக் கண்டறிந்து நிச்சயமாக அவர்கள் எங்களுடைய நிலைப்பாட்டை அனைவருமே ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழல் வரும். ஆகவே ஒரு கொலை நடந்தால் - ஒரு சம்பவம் நடந்தால் - அதன் உண்மைகளைக் கண்டறிந்து ஆதாரங்களுடன் உண்மைகள் நிரூபிக்கப்பட்ட பின்னர் தான் ஒருவர் மீது குற்றம்சாட்ட முடியும். அதுதான் யதார்த்தமானது. அதை விடுத்து சந்தேகத்தின் அடிப்படையில் விடுதலைப்புலிகள் மீது உடனடியாகக் குற்றம் சுமத்துவதோ, அவர்கள் மீது கண்டனங்களைத் தெரிவிப்பதிலோ எந்தவித அர்த்தமும் இல்லை.

கதிர்காமரைப் பொறுத்தவரை தமிழ் மக்களால் வெறுக்கப்பட்டவர் என்பது உண்மை. இதை வைத்துக் கொண்டு புலிகள் மீது குற்றம் சுமத்துவதனால் சர்வதேச சமூகத்திற்குக்கூட ஒரு குழப்பம் ஏற்படலாம்.

ஆனால், நாங்கள் தெளிவாக எங்களுடைய நிலைப்பாட்டை வெளிப்படுத்தி இருக்கின்றோம். இப்பொழுது சமாதானச் சூழல் ஒரு அமைதி முயற்சிகளை முன்னெடுக்க நாங்கள் முயன்று கொண்டிருக்கின்ற சூழலில் - யுத்த நிறுத்தச் சூழலில் விடுதலைப்புலிகள் அங்கே சென்று இப்படியானதொரு தாக்குதல் நடத்த வேண்டியதேவையும் இல்லை. அதற்கான ஒரு சூழலும் இல்லை. அது சாத்தியப்பாடானதும் இல்லை. ஆகவே இந்தவகையில் சர்வதேச சமூகம் நிச்சயமாகப் புரிந்து கொள்ளும் என்றார்.

### அரசியல்துறை...

ளது. வடக்குக்கிழக்கில் இடம்பெறும் போர் நிறுத்த மீறல் பற்றி விசாரிப்பதும் இரு தரப்புக்குழுக் களும் பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய பின்னணியை ஏற்படுத்துவது மாத்திரமே தமக்குள்ள அதிகாரம் எனவும் அவர் மேலும் கூறினார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.